இதழ் 201

மண்

ஜேர்மனி / 2020
வைகாசி - ஆனி / May - June






உலகமெல்லாம் கொரோனா நுண்ணுயிர் பேரழிவு 2019-2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சஞ்சிகை வாசகர்களின் நிதி உதவியினால் கொரோனா வைரஸ் உதவுப்பணிகளுக்காக வவுனியா மாவட்டத்தில் 2020 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட மனிதநேய உதவிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கருத்து...

இன்று உலகத்தையே கொரோனா நுண்ணுயிர் கிருமியானது முடக்கிப் போட்டிருக்கின்றது ஆம், கொரோனா வெல்லக் கூடிய ஒரு வைரஸ்தான். சீனாவின் வுஹான் நகரில் ஆரம்பித்து உலகம் முழதும் பரவிக் கொண்டுள்ள ஒருவித வைரஸ் இந்தக் கொரோனா. இதன் நோய் பாதிப்பை விட இது ஏற்படுத்திய பீதி மற்றும் பொருளாதார பாதிப்பு மிக அதிகம்.

உலகம் முழக்கப் பரவினாலும், இதன் தாக்கம் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிலேயே அதிகமாக உள்ளது. உலகின், மூன்றில் ஒரு பகுதி மக்கள் தொகை கொண்ட ஆசியா, ஆபிரிக்காவைக் காட்டிலும் வெறும் 15% கொண்ட ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவையே அதிகம் தாக்கியுள்ளது. ஏன்... தென் அமெரிக்காவில் கூட பாதிப்பு குறைவாகும்.

கடும் போக்கைக் கொண்டுள்ள நாடுகள்தான் கொரோனாவை இலகுவாக வெற்றிகொண்டுள்ளன என்பதை அவதானிக்க முடிகின்றது. கொரோனாவை உலகுக் கொடுத்த சீனா, இன்று வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும்தான் கொரோனாவைச் சமாளிக்க முடியாமல் தடுமாறுகின்றன. ரஷ்யா, சிங்கப்பூர், வடகொரியா, ஹொங்கொங் இலங்கை போன்றன கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன. அந்த நாடுகளின் கடுமையான முறையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தமைதான் இதற்குக் காரணம்.

இது ஆசியாவில்தான் விரைவாக பரவியிருக்க வேண்டும். பொதுவாக வைரஸ் கிருமிகள் குளிர்காலங்களில் நீண்ட நாள் வாழ்வதால் ஃப்ளு, சளி, காய்ச்சல் போன்றவை அதிகம் பரவுகின்றன. கொரோனாவும் ஒரு வைரஸ் என்பதால், இது ஆசியா, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற வெப்ப நாடுகளில் அவ்வளவாக பரவவில்லை என்றே தோன்றுகிறது. மாறாக குளிர்ப் பிரதேசங்களான ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவையே அதிகம் தாக்குகிறது.வளர்ந்த நாடுகளின் சுத்தமான கட்டமைப்பு, உடல் உழைப்பில்லாத வசதியான வாழ்கை முறை போன்றவையும் குறைந்த நோய் எதிர்ப்பிற்கு ஒரு காரணமாகும். தெற்காசியா மற்றும் ஆபிரிக்கா போன்ற வளரும் நாடுகளில், மக்கள் கல், மண் என்று பாராமல், இயற்கையோடு இணைந்து உழைத்து வாழ்வதால், அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சற்று அதிகமாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கொரோனா பாதிப்பு ஒரு நாட்டின் தட்பவெப்ப நிலை மற்றும் மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை பொறுத்தே உள்ளது. சமூக விலகல் நோய் பரவலை சற்று தள்ளி போடுமே தவிர, அது முக்கிய காரணியாக இருக்க முடியாது. அது நீண்ட நாள் தீர்வும் ஆகாது. மேலும் கொரோனாவிற்கு அஞ்சி வீட்டிலேயே தொடர்ந்து முடங்கினால், பொருளாதாரம் மட்டுமல்ல நோய் எதிர்ப்பு சக்தியும் சேர்ந்தே முடங்கி விடும்.

நோய் எதிர்ப்பு சக்தியை எப்படி உடலில் அதிகரிப்பது என்பதை அறிந்து, அனைவரும் அதற்கான உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறையை கடைப்பிடிக்க வேண்டும். மருத்துவர்கள் மட்டுமல்லாது, பல்வேறு துறை வல்லுநர்கள் கலந்து ஆலோசித்து இதற்கான வழிமுறையை உருவாக்க வேண்டும். உலக நாடுகளின் அரசாங்கங்கள் ஒருங்கிணைத்து மக்களிடம் நடைமுறைப்படுத்த வேண்டும். கொரோனா மட்டுமல்ல இதுபோல் இன்னும் எதிர்காலத்தில் வரக் கூடிய நோய்களுக்கும் இது நிரந்தரத் தீர்வாக இருக்கும்.

கொரோனாவை ஒடுக்குவதில் மேற்கு நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும் போது இலங்கை சிறப்பாகச் செயற்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான். இராணுவத் தன்மையுள்ள ஒரு அரசாங்கம் இங்கு பதவியிலிருப்பதும் அதற்கான ஒரு காரணம். இதற்கிடையில் இலங்கையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மக்கள் வீடுகளுக்கும் முடக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி வந்ததும், வடக்கிலும், கிழக்கிலும் எத்தனையோ இளைஞர்கள் தங்களுடைய உயிர்களைப் பணயம் வைத்துபடி, வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் தமது உறவுகளைப் போசிக்கவேண்டும் என்று களம் இறங்கி இரவு பகலாக பணிசெய்து தமது பச்சாத்தாபத்தை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அதேபோன்று வடக்கு கிழக்கில் பட்டினிச் சாவில் எமது உறவுகள் மரணிக்கப்போகின்றார்கள் என்ற செய்தி கேட்டு, புல்பெயர் உறவுகள் துடித்தார்கள். பனியிலும், குளிரிலும் கடுமையாக உழைத்துச் சம்பாதித்த பணங்களை அங்குள்ள உறவுகளுக்காக அள்ளிக் கொட்டினார்கள். பல அமைப்புக்கள் புலம்பெயர் தேசங்களில் வீடு வீடாக ஏறி இறங்கி திட்டுவாங்கி பணம் சேர்த்து உறவுகளுக்கென்று அனுப்பி வைத்தன. ஆனால் அந்த உறவுகள், அனைவரும் அக்கறைப்பட்ட அந்த தமிழ் உறவுகள், இன்று சாராயக் கடைகளின் முன்பு வரிசையாக நிற்கும் காட்சியானது மனங்களை கனக்கச் செய்யும்படியாகவே இருக்கின்றது. அந்த மக்கள் பற்றி புலம்பெயர் மக்களுக்கு இருக்கின்ற அக்கறை, கவலை அத்தனையையும் சுக்குநூறாக உடைக்கும்படியாகவே இகின்றது. -ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திசூடி விளக்கம்!...

மைவிழியார் மனை அகல்...

கணவன் என்று ஒருவனை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்தாமல சில பெண்கள் சுதந்திரமாக வாழ்வார்கள். இப்படி வாழ்கிறவர்களின் வாழ்க்கை இழிவானதாகும். செல்வத்துக்கு ஆசைப்பட்டு,ஒழக்கமின்றி வாழும் இவர்களைப் பரத்தையர் என்று கூறுவார்கள். ஆண்களைக் கவர்ந்து தம்மிடம் வரச்செய்ய, இவர்கள் அலங்கரித்துக்கொண்டு காட்சியளிப்பார்கள். கண்களில் மை தீட்டிக்கொள்வார்கள். "மை" விழியாள் என்று அழைப்பது இவர்களைத்தான். இவர்களை நாடிச் செல்லும் ஆண்களும் நல்லவர்களல்ல. ஒழக்கம் கெட்டவர்களே. இத்தகைய பெண்களிடம் போய் தங்களின் செல்வத்தை இழந்து ஏழையாகிப் பிறருடைய அவமதிப்புக்கும் ஆளாவார்கள் இவர்கள். நீங்கள் இல்வாழ்க்கை நடத்தும் போது மைவிழியாராகிய பரத்தையர் வீட்டுப் பக்கம்கூடப் போகக்கூடாது ஒதுங்கிப்போ என அவ்வைப்பாட்டி எடுத்துரைக்கிறார்.

மொழிவது அறமொழி...

நாம்ஒரு விசயத்தைக் கூறும்போது தெளிவாகச் சொல்ல வேண்டும். கேட்பவர்களுக்குச் சந்தேகம் தோன்றாதபடி விளக்கமாகக்கூற வேண்டும். சிலர் இப்படித் தெளிவாகப் பேசமாட்டார்கள். நம்பிக்கை ஏற்படாமல் சந்தேகம் ஏற்படும்படி சொல்லுவதை அரைகுறையாகக்கூறி ஐயத்தை உண்டாக்குவார்கள். இதனால் கேட்பவர்கள் நம்பிக்கைப்படாமல் குழம்புவார்கள். அப்படிக் குழப்பம் ஏற்படுமானால் அவர்கள் உங்கள் பேச்சை மதிக்கமாட்டார்கள். ஒரு விசயத்தைக் கூறியதும் அதைக் கேட்பவரிடம் ஏன்? எப்படி? எதற்காக? எப்போது? என்கின்ற கேள்விகள் தோன்றிக் குழப்பக்கூடாது. இத்தகைய ஐயங்கள் ஏற்படாதபடி, முழுவிபரமும் விளங்கும்படி பேசவேண்டும். கூறும் விடையங்களை ஐயத்துக்கு இடமில்லாமல் திருத்தமாகக் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குண்டாம்..... (மூதுரை) (தொடர்ச்சி)

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு..

உடன் பிறந்தவர்கள் எல்லோரும் நன்மை செய்வார்கள் என்று ஏமாறாதே. எல்லாரும் செய்யமாட்டார்கள். வியாதி மனித உடலில்தான் தோன்றுகிறது. தோன்றி என்ன செய்கிறது!..துன்பம் தருகிறது. வதைக்கிறது. வாட்டுகிறது. அதுபோலதான். ஆனால் அந்த வியாதிப் போக்கும் மருந்தோ மலையில் இருக்கிறது. இருந்தாலும் நோய் தீர்த்து நமக்கு இன்பம் தருகிறது. இந்த மருந்து போன்றவர்களும் இருக்கிறார்கள். நமக்கு எவ்வித உறவினராயும் இருக்கமாட்டார். இருப்பினும் உதவி செய்வார். உடன் பிறந்தாரும் சுற்றத்தாருமே நன்மை செய்வர் என்று எண்ணமுடியாது. இவர்கள் தீமையும் செய்வர். உறவே அல்லாத அந்நியர் நன்மை செய்வதும் உண்டு.

இல்லாள் அகத்துஇருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடும்

குடும்பத்துக்கு மனைவிதான் முக்கியமானவள். அவளுடைய பொறுப்பும் அதிகம். குடும்பம் நன்றாக இருப்பதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் அவளே காரணம். இவற்றையெல்லாம் உணர்ந்து குடும்பம் நடத்தினால் அப்புறம் அந்த வீட்டில் இல்லாத பொருள் எதுவும் இல்லை. மனைவி இவற்றை உணராமல் எப்போதும் எரிந்து விழந்து கொண்டிருந்தால் அது வீடாயிருக்காது. புலிக்குகையாகத்தான் இருக்கும். புலிக்குகைக்கு மனிதன் வருவானா!..எல்லாம் நிறைந்த வீடு எது என்றால் நல்ல மனைவி வாய்க்கப்பெற்றவன் வீடுதான். அதுவல்லாதது காடுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு...

குருவி ஒன்று மரத்தில் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அது தனது கூட்டில் முட்டையிட்டு அடைகாத்தது. அருகில் புற்றில் ஒரு பாம்பு வசித்து வந்தது. குருவியின் முட்டையை உண்ண அது சமயம் பார்த்து இருந்தது. குருவி ஒருநாள் உணவுதேடி வெளியே சென்றது. பாம்பு மெல்ல குருவிக்கூட்டுக்குள் நுழையப்போனது.

காகம் ஒன்று இதைப் பார்த்து "கா..கா" என்று கத்தியது. கிளிகள் இதைக் கேட்டெழுந்து "கீ...கீ என்று கத்தின. மைனாக்கூட்டம் "கீச்...கீச்" என்று மொய்த்துக் கத்தின. கரிக்குருவி, காடை, கௌதாரி எல்லாம் திரண்டு ஓடிவந்து அலறியடித்தன.

வட்டமிட்ட பருந்தும் கீழே விரைந்துவந்து தன் துட்ட குணத்தை விட்டுவிட்டு அவைக்குத் தணையாக நின்றது. அத்தனையும் ஒன்றுசேர்ந்து பாம்பை விரட்டத் தொடங்கின. "ஐயோ" என்று அலறியடித்து பாம்பு அவ்விடத்தைவிட்டு தூரதேசம் ஓடி மறைந்தது. பறவையினம் சுதந்திரமாக சந்தோசத்துடன் வாழ்ந்தன. ஆகவே நாமும் அனைவருடனும் ஒற்றுமையாக வாழ்தால் பல நன்மைகளைப் பெறலாம் என்பதை இக்கதையின் மூலம் புரிந்துகொண்டு வாழ்வோமாக!..

ஒன்றுகூடிப் பறவையினம் பகையை வென்றன
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

ஈழமும் தமிழும்...

கி.பி. 1800களில் கிழக்கிலங்கையில் சின்ன ஆலிம் அப்பா என்கிற புலவர் வரகவியாக திகழ்ந்துள்ளார். இவருடைய இயற்பெயர், மீரா லெவ்வை ஆலிம் எனத் தெரியவருகின்றது. இவர், ஞானரை வென்றான் என்கிற இஸ்லாமிய ஞான நூலொன்றினை விருத்தப் பாவினால் இயற்றியுள்ளார். ஞானரை வென்றான் நூலினது சிதைந்த ஏட்டுப் பிரதியொன்றை மூலமாகக்கொண்டு அச்சுவாகனம் ஏற்றியவர் ஆ ஷரிபுதீன் புலவர் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி.....

இவ்வுலகிலுள்ள செல்வங்களில் மிகவும் மேலானது கல்விச் செல்வமாகும். "மன்னனுக்குத் தன் தேசத்தில்தான் மதிப்பு உண்டு. ஆனால் கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு" கல்வி கற்றவர்கள் யாவரும் சபையில் முன்னிருப்பர்..

வாழ்வைச் செழமைப் படுத்துவது கல்வியே. இக்கல்வி ஒவ்வொருவருடைய முயற்சிக்கும் ஓர் உயர்ந்த வழிகாட்டியாகும். இது அறிவு வளர்ச்சிக்கு அருமருந்தாகும். மனிதனின் பிரச்சனைகளுக்கும் தடைகளுக்கும் விடையாகவும் உள்ளது கல்விதான். இதனாலேயே "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பர். மேலும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றும் கூறுவார்கள்.

ஏனைய செல்வங்கள் கொடுக்கக் கொடுக்கக் குறைந்துகொண்டே போகும். ஆனால் கல்விச் செல்வமோ கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டே போகும். இதை நீரினாலோ, தீயினாலோ, புயலினாலோ அழித்துவிட முடியாது. அதனைக் கள்வராலோ அரசினாலோ கவரப்படவும் முடியாது.

ஒருவரின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது இளமைப் பருவம். எனவே இளமையில் கற்றல் அவசியமாகின்றது. அதனாலன்றோ "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" எனக்கூறப்படுகின்றது. எனவே என்றும் அழியாமல் எமக்கு வழிகாட்டும் கல்வியை இளமையில் கற்பதில் நாம் ஆர்வம் கொள்வோம்!..

"தேடித் தினம் பூக்களில் தேன் சேர்க்கும் தேனீ போல்
தேர்ந்து நல்ல கல்வியைத் தேடி நாமும் கற்போம்"-

மண் சஞ்சிகையின் 30 வது ஆண்டுவிழா!...

உலகில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தின் விளையவாக இவ்வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த 30 வது ஆண்டு நிறைவுவிழா பின்போடப்பட்டுள்ளது. நிலமை சாதகமாக வரும்பொழது அதற்கான திகதியை அறிவிப்போம். விழாவிற்கான ஒத்துழைப்பை நல்கவிருந்த அனைவருக்கும் நன்றிகள்!. -ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை மறந்தால்...

ஒருதடவை முல்லா கப்பல் பயணம் செய்துகொண்டிருந்தார். கப்பல் திசைமாறித் தாறுமாறாக அலையத்தொடங்கியது. கரையோ பல நாட்களாகியும் தென்படவில்லை. உணவும் குடிநீரும் முற்றிலும் தீர்ந்துவிட்டன. கப்பலில் பயணம் செய்தவர்களுக்குத் தாங்கள் உயிர் பிழைப்போமா?.. என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. அதனால் பிரயாணிகள் அனைவரும் கப்பலின் தரையில் மண்டியிட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தான் உயிர் பிழைத்தால் வீடு வாசல்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்குத் தருமம் செய்துவிடுவதாக ஒருவர் சொன்னார். மற்றொரு பிரயாணி தான் உயிர் பிழைத்தால் ஆயிரம் ஏழை மக்களுக்கு நாள் தவறாமல் உணவளிப்பதாக வாக்குறுதி கொடுத்தார். ஒவ்வொரு பிரயாணியும் தம்மிடமிருக்கும் விலைமதிப்புள்ள பொருட்களைத் தானம் செய்து விடுவதாக வாக்குத் தந்தனர்.

இந்தக்காட்சிகளை எல்லாம் ஒரு பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த முல்லா திடீரென்று அவர் அதோ கரை தெரிகிறது நாம் எல்லாம் உயிர் பிழைத்துவிட்டோம் என்று கூறினார். பிரயாணிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லோரும் கரைசேர்ந்து ஆனந்தக் கூத்தாடலாம் என நினைத்தார்கள். முல்லா உடனே உரத்த குரலில் அன்பர்களே நமக்கு உயிர்ப்பிச்சையளித்த கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வோம் என்றார்.

இவர் பேச்சுக்கு யாருமே செவிசாய்க்கவில்லை. உயிர் பிழைப்பது உறுதியாகிவிட்டதால் இனிக்கடவுளின் தயவு தங்களுக்குத் தேவையில்லை என்று கருதினார்கள். சற்றுமுன் சொன்ன வாக்குறுதிகளை எல்லாம் மறந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் ஏதோ உணர்ச்சி வசப்பட்டுக் கடவுளுக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டோம். ஒரேயடியாகச் சொத்து சுகங்களைத் தியாகம் செய்யமுடியுமா?.. என்றெல்லாம் பேசத்தலைப்பட்டார்கள்.

முல்லா அடக்கமாகக் கலகலவென நகைத்தான். ஏன் சிரிக்கிறீர்கள் என்று பிரயாணிகள் வினாவினார்கள். கரை கண்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவதாக நான் கூறியது உண்மையல்ல..ஒரு விளையாட்டுக்குத்தான் அவ்வாறு சொன்னேன் என்றார் முல்லா. பிரயாணிகள் நாலாபுறமும் கடலில் கண்களை ஓட்டினர். முல்லா சொன்னது உண்மைதான் கரை எந்தப் பக்கமும் கண்களுக்குத் தெரியவே இல்லை. உடனே பிரயாணிகள் அனைவரும் அழுகுரல் எழப்பியவாறு கடவுளைப் பிரார்த்தனை செய்வதற்காக மண்டியிட்டு அமர்ந்தனர்.

படிப்பினை என்பது மனிதர்கள் எப்போதும் உயிர் பிழைக்க முடியாது என்ற சந்தர்ப்பத்தில் தம் தவறுகளை உணர்கிறார்கள். மீண்டும் வாழ்வதற்கு வாய்ப்புக்கிடைத்தால் உடனே அதே தவறுகளை மீண்டும் செய்கிறார்கள். வாழ்வு நிரந்தரமற்றது. ஆடம்பரங்களை மட்டும் சுற்றிவராமல் சக மனிதர்களுக்கு உதவும் பண்புகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்!..

செல்வன் திருக்குமார் செல்வநாயகம்
திருஞானசம்பந்தர் குருகுலம்
மட்டக்களப்பு

குள்ளக்குள்ள வாத்து!...

குள்ளக்குள்ள வாத்து
குளத்தில் நீந்தும் வாத்து
பள்ளம் மேடு பார்த்து
பைய நடக்கும் வாத்து
வெள்ளை கறுப்பு போன்ற
வேறு வேறு வர்ணம்
உள்ள போதும் கூட
ஒன்றாய் செல்லும் வாத்து
பள்ளிக்கூடம் செல்லும்
பாப்பாக் கூட்டம் போல
மெல்லச் செல்லும் நீரில்
மிதக்கும் படகே வாத்து!..

செல்வி ச சானியா
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

கொரோனா-ஆத்திசூடி

அடிக்கடி கையைக் கழுவு
ஆபத்தை அறிந்துகொள்
இல்லத்தில் தரித்திரு
ஈரடி தள்ளி நில்
உற்றாரை ஒதுக்கி வை
ஊரடங்கை மதித்து நட
எங்கேயும் சுற்றாதே
ஏக்கத்தை அடக்கி வை
ஐயமின்றி அனைத்தையும் உண்
ஒதுங்கி இருக்கக் கற்றுக்கொள்
ஓரிடத்தில் ஓய்ந்திரு
ஔஷதம் இல்லை கொரனாவிற்கு
இ:து அறிதலே இனிய வாழ்வு!..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்த பேனாவின் சுயசரிதை...

நான் கொழும்பிலுள்ள பிரபல தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டேன். என்னுடன் சேர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உற்பத்தி செய்யப்பட்டனர். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் இருந்தோம். திடீரென்று ஒரு நாள் என்னுடன் சேர்ந்து குறிப்பிட்ட சிலரை வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு சென்றனர்.

எங்களைக்கொண்டு சென்ற இடத்தில் விற்பனைக்காக அழகாக அடுக்கிக் காட்சிப்படுத்தினர். அக்கடைக்கு வருவோர் எல்லோரும் எங்களை அழகாக இருக்கிறோம் என்று பார்த்தனர். திடீரென்று ஒருநாள் ஒரு பெரியவரும் அவரது மகனும் கடைக்கு வருகை தந்தனர். வந்த அவர்கள் கடையிலுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டனர். பார்க்கும் வேளையில் அவரது மகன் என்னை விரும்பி வாங்கிக்கொண்டான்.

என்னை வேண்டிக்கொண்டு அவன் தனது வீட்டுக்குவந்து எழுதி அழகு பார்த்தான். வீட்டிலுள்ள அனைவரிடமும் என்னைக் காட்டினான். அவன் தனது வகுப்பிற்கு என்னைக் கொண்டு சென்றான். அங்கு அவனது நண்பர்கள் என்னை ஆவலுடன் பார்வையிட்டனர்.. திடீரென்று ஒரு பையன் ஓடிவந்து என்னை இழுத்தான். இழக்கும்போது கை தவறிக் கீழே விழுந்து நான் உடைந்துவிட்டேன்.

அப்போது என்னை வாங்கிவந்த சிறுவன் அழத்தொடங்கினான். அப்பொழது பக்கத்திலிருந்த அவனது நண்பன் அழவேண்டாம் என்னிடம் ஒரு புதுப்பேனா உள்ளது அதை உனக்குத் தருகிறேன். உடைந்த பேனாவை நீ குப்பைத்தொட்டியில் போட்டுவிடு என்றான். அவனும் அப்படியே போட்டுவிட்டான். நான் இப்போது யாருக்கும் பிரயோசனமற்ற பொருளாக குப்பைத் தொட்டியில் கிடக்கிறேன். அன்பான சிநேகிதனால் எனது உறவுகள் அவன் கைகளில் தவண்டு விளையாடின...

செல்வன் இ. இவாஞ்ஜன்
திருஞானசம்பந்தர் குருகுலம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 19

9				2	4		8	
8	3						2	
				3			7	
	5	1	6	4	8			
	2				1			
6		8						
	8	5		1		9		
		4	7		5			
2							1	

சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 112
(வைகாசி-ஆனி - 2020)

1	2	3	4
5	6	7	8
9	10	11	12
13	14	15	16

இ – வ:

01-03 உலகை ஆட்டிப்படைத்துவரும் கொரோனா வைரசின் பெயர்.

11 -12 சில மாணவர்கள் இது எழுதுவதில் வல்லவர்கள்.

வ – இ:

07-05 செல்வன் எதிர்பாற்சொல்.

16- 15 ஊட்டச் சத்து நிறைந்தது

கீ – மே:

13-05 பாய்ந்து ஓடும் நீர்நிலை.

14-10 ஊர்ந்து செல்லும் உயிரினம்.

மே – கீ:

02-10 சின்னத்திரை நாடகங்களில் அதிகமாகக் காணப்படும் கதாபாத்திரம்.

04-12 உரிய வயதில் இதைக் கற்றுத் தேறவேண்டும்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப்புதிர்ப் போட்டி...

உங்கள் மூளைக்கு வேலை.. கீழள்ள இரண்டு கணக்குகளையும் செய்து பாருங்கள். முடியாவிடின் வேறொரு பக்கத்தில் விடைகள் உண்டு....

கணக்கு-1

9	-		-		= 3
+	0	+	0	+	0
	-		+		=1
-	0	-	0	-	0
4	+	4	+		= 9
=9	0	=3	0	=5	0

கணக்கு-2

11	+		-		= 32
-	0	+	0	-	0
	+	13	+		=1
-	0	-	0	x	0
	+		:	4	= 8
=4	0	=51	0	=20	0

ஈழமும் தமிழும்.....

1-

17ஆம் நூறற்ாண்டிலே ஐரோப்பா தேசத்தில் தமிழ் எழத்துக்கள் உருவாக்கப்பட்டு அத்தேசத்தில் தமிழ் அச்சேறியுள்ளது. ஐரோப்பாவில் தமிழ் அச்சு எழத்துக்கள் உருவாக்கப்பட்டதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் ஈழத்தில் பணிபுரிந்த பிலிப்பஸ் பல்தேயுஸ் ரிடைனரள டியடனயநரள) என்பவராவார். இத்தகவல் பற்றிய விபரத்தை கல்லடி வேலுப்பிள்ளை அவாக்ள் தமது யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2-

வில்லியம் நெவினஸ் , 1850ஆம் ஆண்டு நியாய இலக்கணம் (நுடநஅநவெள ழக டுழபஉ) என்னும் தமிழ் நூலினை எழதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள நியாய நெறிகளின் அரிய விதிகளை இந்நூலிலே தொகுத்து விளக்கியுள்ளார். யாழ்ப்பாணத்தில் சங்குவேலி கிராமத்தில் 1820ஆம் ஆண்டு பிறந்த வில்லியம் நெவின்ஸின் இயற்பெயர் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா!...

கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைத்திருக்கும் ஒரே உறவு
என்னைப் பெற்ற அம்மா!..

பிள்ளைகளின் ஆசைகள்
ஒரு புறம் இருந்தாலும்
தான் அனுபவித்த துன்பங்களை
தனது பிள்ளைகள் ஒருபோதும்
அனுபவிக்கக்கூடாது என்று
நினைப்பவள்தான் அன்புஅம்மா!..

கேட்ட உடனே கொடுப்பதற்கு
தன்னால் முடியாது என்று
தெரிந்துதானே கடவுள்
அம்மாவை அனுப்பி இருப்பார்!..

கடவுள் கொடுத்த வரம்
கிடைக்கவில்லை எனக்கு
கடவுளே கிடைத்தார்
வரமாக என் அம்மா!..

அன்பை உள்ளே
வைத்துக்கொண்டு
எதிரியைப் போல்
தெரியும் ஒரே ஒரு உறவு
என் கோவில்தான் அம்மா!..

ஓடிவிளையாடு பாப்பா!..

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
குழந்தையை வையாதே பாப்பா!..

சின்னஞ்சிறு குருவி போல - நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வண்ணப்பறவைகளைக்கண்டு-நீ
மனதில் மகிழ்ச்சிகொள் பாப்பா!..

சொல்லில் உயர்வு
தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழது படித்திடடி பாப்பா
துன்பம் நெருங்கி
வந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!..

சோம்பல்மிகக் கெடுதிபாப்பா-தாய்
சொன்ன சொல்லைத்
தட்டாதே பாப்பா
நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்!...

-பாரதியார்-

செல்வன் ச தனுஷ்காந்தன்
திருஞானசம்பந்தர் குருகுலம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020இல் மிகச்சிறந்த நாடுகளின் பட்டியல் வெளியாகியுள்ளது

உலக நாடுகளில் கல்வி, வாழ்க்கைத்தரம், பாதுகாப்பு, பொருளாதாரம் போன்ற அம்சங்களை முன்வைத்து 2020ம் ஆண்டிற்கான தலைசிறந்த நாடுகளின் பட்டியலை, அமெரிக்க செய்தி மற்றும் உலக அறிக்கை என்ற பத்திரிக்கையும், வார்டன் பள்ளி பென்சில்வேனியா பல்கலைக்கழகம் மற்றும் பாவ் என்ற உலகளாவிய ஆலோசனை மையமும் சேர்ந்து வெளியிட்டுள்ளன. அதன் அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள நாடுகள் வருமாறு:-

இயற்கையான சூழலில் வாழக்கூடிய நாடுகள்:
1) சுவீடன் 2) சுவிட்சர்லாந்து 3) பின்லாந்து

மிகவும் பலம் வாய்ந்த நாடுகள்:
1) அமெரிக்கா 2) ரஷியா 3) சீனா

கல்வியில் சிறந்த நாடுகள்:
1) அமெரிக்கா 2) பிரிட்டன் 3) கனடா

தொழில் தொடங்க ஏற்ற நாடுகள்:
1) தாய்லாந்து 2) மலேசியா 3) சீனா

பெண்களுக்கான நாடுகள்:
1) டென்மார்க் 2) ஸ்வீடன் 3) நெதர்லாந்து

சிறப்பான வாழ்க்கைத்தரம் உடைய நாடுகள்:
1) கனடா 2) டென்மார்க் 3) ஸ்வீடன்

அனைத்து விதத்திலும் சிறந்த நாடுகள்:
1) சுவிட்சர்லாந்து 2) கனடா 3) ஜப்பான் 4) ஜெர்மனி 5) ஆஸ்திரேலியா 6) பிரிட்டன் 7) அமெரிக்கா 8) ஸ்வீடன் 9) நெதர்லாந்து 10) நோர்வே.

(கொரோனா வைரஸ் கிருமி உலகெல்லாம் பரவிப் பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்டிருப்பதால் இன்று சகல நாடுகளும் அனைத்தையும் இழந்து நிலைகுலைந்து தவிக்கின்றன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்நெறியில்..... (நந்தகுமார்)

உடல் உள ஆரோக்கியம்...

அருவருப்பான வார்த்தைகள் அழகைக் குறைக்கும்.
ஆரோக்கியம் ஆனந்த வாழ்வு தரும்.
இரக்கம் உள்ளவன் சிறக்க வாழ்வான்.
ஈயாதார் வாழ்வு இன்பம் பெறாது.
உள்ளம் உறுத்தப்பட்டால் உடலும் உருகும்.
ஊக்கமான உறுதி இறுதிவரை இன்பம்.
எது நேர்ந்தாலும், நிலைதடுமாறாமல் நட.
ஏற்றம் வரும்போது எதிர்பாராத மாற்றமும் வரும்.
ஐம்பொறிகளை அடக்கித்தன்னுள் ஆத்திரத்தைக் குறை.
ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும்.
ஓர்மம் ஒப்பற்ற சாதனைகளை உருவாக்கும்.

அளவுடன் உண்பவன் அறிவாளி. அதிகம் உண்பவன் அதிகம் சுமக்கிறான். செமித்துபின் செலுத்து, செமிபாடு சுலபமாகும். கோபம், கொடிய முகத்தைக் காட்டும். சினந்து பேசினால், சிரமங்கள் அதிகமாகும். கசப்பான வார்த்தைகள் கலகத்தைக் கூட்டும். பகைதீர ஒரேவழி, நட்பு ஒன்றுதான். மனவலி உடல்வலியைவிட வேதனையானது. தவறு செய்தவர்கள், தவிப்புடன் வாழ்கிறார்கள். மதுபோதைகள் மனிதனை மாசு படுத்துகிறது. குற்றமில்லாத மனம் குதூகலம் பெறும். சிரிக்கும்போது சிலநோய்கள் சிதறிப்போகின்றன.

மாசற்ற மனதில் மார்க்கங்கள் மகிமை பெறும். நல்லவற்றை நாடு அல்லவற்றை அகற்று. உன்னதமான பணிகள் உன்னை உயர்த்தும். நீதியில் நிற்பவன் நிமிர்ந்து நடக்கிறான். உயர்வும் தாழ்வும், உன்னாலே உண்டாகிறது. வழிமுறைகள் வாழ்க்கையை வழக்காமல் வழிநடத்தும். சந்தோஷமும் துக்கமும் உன் சாவியில் உள்ளது. போதனைகள் மறந்தால், வேதனைகள் மிஞ்சும். முழ முயற்சி எடுத்துத்தன்னும் மனிதனாக வாழ். நடைமுறை பிழைத்தால், தலைமுறை பிழைக்கும். நிறைவை நினைக்காமல் நின்மதியை எட்ட முடியாது. மென்மையாகக் கூறுங்கள் மேன்மை பெறுவீர்கள். மன அமைதியில் இருந்தே மகிழ்ச்சி ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறளும் பொருளும்

சிற்றினஞ்சேராமை: –

451. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

452. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

453. மனந்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல்.

454. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

455. மனத்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினத்தூய்மை தூவா வரும்.

456. மனத்தூயார்க் கெச்சநன் றாகு மினத்தூயார்க்
கில்லைநன் றாக வினை.

457. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழும் தரும்.

458. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

459. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

460. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறளும் பொருளும் (தீயவர்களுடன் சேரக்கூடாது)

451. பெரியோர் இயல்பு சிற்றினத்திற்கு அஞ்சி ஒதுங்கும் சிற்றினம் சிறுமையையே உறவாகத் தழுவிக்கொள்ளும்.

452. நிலத்தின் இயல்புக்குத் தக்கபடி நீரின் குணம் மாறும். (அதுபோல) மக்களின் அறிவு அவர்கள் சேர்ந்துள்ள இனத்தின் இயல்பை உடையது

453. மக்களுக்குப் பொது அறிவு மனத்தால் உண்டாகும். இவன் இப்படிப்பட்டவன் என்று சொல்லும் சொல் அவன் சேர்ந்த இனத்தால் உண்டாகும்.

454. சிறந்த அறிவை ஒருவன் மனதில் இருந்தது போலக் காட்டினாலும் அவன் சேர்ந்த இனத்தின் அறிவே அது ஆகும்.

455. மனத்தூய்மையும் செய்யும் செயல் தூய்மையும் ஆகிய இரண்டும் சேர்ந்த இனந்தூய்மையைப் பொறுத்ததே.

456. தூய மனமுடையவர்களுக்கு நற்குண மக்கள் தோன்றுவார்கள். தூய இனத்தை உடையவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்.

457. மன நலம் உயிருக்கு ஆக்கம் தரும். இனநலம் அதனோடு எல்லாப் புகழையும் சேர்த்துத்தரும்.

458. நல்ல மன உறுதி உடையவராயினும் சான்றோர்க்கு இனத்தின் நன்மை சிறந்த காவலாக அமையும்.

459. மன நலத்தால் மறுமை இன்பம் உண்டாகும். இன நலத்தால் அச்சிறப்பு மேலும் வலிமைபெறும்.

460. நல்ல இனத்தைவிடச் சிறந்த துணை உலகில் வேறு எதுவும் இல்லை. தீய இனத்தைவிடத் துன்பம்தரும் பகையும் வேறு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...

உப்பு.....

காற்றாடி நூலின் துணையோடு உயர்ந்து..உயர்ந்து வானின் உச்சியில் ஏறியது. "பார்த்தீர்களா!...நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்" என்று தன் பெருமையைப் பறைசாற்றியது. பழைய வரலாற்றை அடியோடு மறந்தது காற்றாடி. "நூல் இனி எதற்கு" என்று கூறிக்கொண்டே நூலைப் பட்டென்று அது அறுத்துவிட்டது. கொஞ்ச நேரத்தில்..ஊரின் மூலையில் ஒரு முள் மரத்தில் விழுந்து, கிழிந்து உருக்குலைந்து கிடந்தது காற்றாடி. காற்றாடியின் கதை தெரிந்த முள் மரம் சொன்னது...

"ஏற்றி வைத்தவனை மறக்கிறவன் இறக்கி வைக்கப்படுவான்"

பாய்ச்சல்.....

மரத்தை வெட்டி விழத்திவிட்டு கோடரியும் கயிறும் விறகுவெட்டிக்குப் பக்கத்தில் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தன. காட்டுக்குள் நுழைந்த ஒரு மரம்கொத்தி மாறி..மாறி நான்கு மரங்களைத் தன் அலகால் வெட்டிவிட்டுப் பறந்துபோனது. "இந்த மரங்கொத்தியைப் பார்த்தாயா" நான்கு மரங்களை மாறி..மாறி தன் அலகால் வெட்டியது. ஒரு மரத்தையாவது அதனால் உருப்படியாக வீழ்த்த முடிந்ததா!.. என்று கயிற்றைப் பார்த்துக் கேட்டது கோடரி. மரங்கொத்தியால் அது முடியாது என்றது கயிறு. ஏன் அப்படிச் சொல்கிறாய்!.. கயிறு சொன்னது...

"நாலு மரத்தையும் வெட்டுறவன் ஒரு மரத்தையும் விழுத்துவதில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப்போட்டி-175
(வைகாசி - ஆனி -2020)

1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31	32	33	34	35
36	37	38	39	40	41	42
43	44	45	46	47	48	49

இ-வ

01-05 வைகாசி மாதம் 1ம் திகதி உலகம் எல்லாம் இவர்களுக்குரியதிருநாள்.
11-13 அழகான பறவை.
19-21 உணவு உட்கொள்ளும் பாத்திரம்.
22-26 பொதுமறை தந்த உத்தமர்.
45-46 நீர் நிலைகளில் ஒன்று.

வ-இ

07-05 இது செழித்து வளர்ந்தால்தான் பயன் கிடைக்கும்.
11-08 அரசன் ஒத்த சொல்.
19-16 உலகம் வெப்பமாவதால் இதுக்கும் தட்டுப்பாடு வரலாம்.
45-44 உயிரினங்களில் அதிக காலம் வாழ்வது எது.

கீ.மே

19-05 பால் இதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு.
43-29 கொரோனா வைரசின் பெயர்.
45-31 பன்னிரண்டு மாதங்கள் கொண்டது இது.
47-26 மனிதவாழ்வுக்கு நல்ல போதனைகளைத்தந்த உத்தமர்.
49-28 குழந்தைகளுள்ள வீட்டில் பாட்டிமார் பாடுவது.

மே-கீ

01-15 பழமை, ஆதி என்று பொருள்படும்.
07-21 துணி வகைகளில் ஒன்று.
25-46 சரித்திரம் ஒத்த சொல்.
27-48 கொரோனா வைரஸ் அதிகமான மக்களைப் பலிகொண்ட நாடு.
30-44 எப்போதும் இது பேசி வாழ்ந்தால் பல நன்மைகள் உண்டு.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தொழிலாளர்தினம்!....

மே நாள் அல்லது மே தினம் எனப்படும் உலகத் தொழிலாளர் தினம் ஆண்டுதோறும் மே முதலாம் திகதி (மே 1) உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதாகும் தொழிலாளர் போராட்டம் 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் - 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வேகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளிகள் பலரும் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரக் கட்டாய வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதற்கெதிரான குரல்களும் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் துவங்கியது.

இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (chartists). சாசன இயக்கம் 6 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை கோரிக்கை. பிரான்சில் தொழிலாளர் இயக்கம் 1830களில் பிரான்சில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் தினமும் கட்டாயமாக 15 மணி நேரம் உழைக்க வேண்டி இருந்தனர். இதை எதிர்த்து அவர்கள் பெரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

1834இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற கோஷத்தை முன்வைத்து பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இவையனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. ஆஸ்திரேலியாவில் தொழிலாளர் இயக்கம் ஆஸ்திரேலியாவில் மெல்பேர்னில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளிகள் உலகிலேயே முதன் முதலாக 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து 1856இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர்.

இது தொழிலாளி வர்க்க போராட்டத்தின் மைல் கல்லாக அமைந்தது. ரஷ்யாவில் மே தினம் முதல் சார் மன்னரின் ஆட்சியின் கீழ் ரஷ்யத் தொழிலாளிகள் பெரும் துன்பங்களுக்கு ஆளானார்கள். இங்கும் 1895 - 1899க்கு இடைப்பட்ட காலத்தில் நாற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. 1896 ஏப்ரல் மாதத்தில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறு பிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளிகளின் நிலைமை குறித்து விரிவாக அலசியதோடு, ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதார போராட்டம் அரசியல் போராட்டமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழச்சிக் கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் அமெரிக்காவில் 1832இல் பொஸ்டனில் கப்பலில் பணியாற்றிய தச்சுத் தொழிலாளர்கள் 10 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். அதே போல், 1835இல் பிலடெல்பியாவிலும், பென்சில்வேனியாவிலும் இதே கோரிக்கையை முன்வைத்து இயக்கம் நடத்தப்பட்டது. பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும், இரயில்வே தொழிலாளர்களும் குறைவான வேலை நேரத்தை வலியுறுத்தி 1877இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து "அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்கு காரணமாகவும் அமைந்தது. தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்விக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழவதும் 3,50,000 தொழிலாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலை நிறுத்தம் துவங்கியது.

இவ்வேலை நிறுத்தத்தில் 1200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். தொழிலாளர்களின் எழச்சிமிக்க வேலை நிறுத்தத்தினால், அமெரிக்க பெரு நிறுவனங்கள் மூடப்பட்டன. இரயில் போக்குவரத்து நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிலாளர் ஊர்வலங்கள் அமெரிக்காவை உலுக்கியது. மிச்சிகனில் மட்டும் 40,000 தொழிலாளர்களும், சிக்காகோவில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். சிக்காகோ பேரெழச்சி மே 3, 1886 அன்று "மெக்கார்மிக் ஹார் வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின்" வாயிலில் 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டு கண்டனக் கூட்டத்தை நடத்தினர். இங்கு இடம்பெற்ற கலவரத்தில் 4 தொழிலாளர்கள் காவற்துறையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாயினர். இச்சம்பவத்தை கண்டிக்கும் வகையில் சிக்காகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரெழுச்சி மே 3, 1886 அன்று "மெக்கார்மிக் ஹார் வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின்" வாயிலில் 3000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அணி திரண்டு கண்டனக் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் மே 4 அன்று மாபெரும் கண்டன கூட்டம் ஒன்றை நடத்தினர் தொழிலாளர்கள். 2500 தொழிலாளர்கள் கலந்து கொண்ட கண்டனக் கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது. இந்நேரத்தில் காவல்துறையினர் அனைவரையும் கலைந்து செல்லுமாறு கூறினர். இவ்வேளையில் திடீரென்று கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டதில் அந்த இடத்திலேயே ஒரு காவல்துறையினர் பலியானார். பின்னர் போலீசார் கூட்டத்தினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தித் தொழிலாளரைத் தாக்கினர். அத்துடன் தொழிலாளர் தலைவர்களை கைது செய்து வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கு ஜூன் 21, 1886 அன்று துவங்கியது. 7 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ஹேமார்க்கெட் படுகொலை என அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்வினை ஒட்டி அந்த ஹேமார்க்கெட் சதுக்கத்தில் நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கறுப்பு தினம் நவம்பர் 11, 1887 அன்று தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல்ஃப் ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர். நவம்பர் 13, 1887 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் அமெரிக்க தேசமே அணி திரண்டது. நாடு முழுவதும் 5 லட்சம் பேர் இவர்களது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதோடு, அமெரிக்கா முழுவதும் கறுப்பு தினமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அமெரிக்க தொழிலாளர்களின் 8 மணி நேர வேலைக்கான போராட்டமும், சிகாகோ தியாகிகளின் தியாகமும்தான் இன்றைக்கு மே தினமாக - உழைப்பவர் தினமாக நம்முன் நிற்கிறது. அனைத்து நாடுகளிலும் மே தினம் 1889 ஜூலை 14 அன்று பாரீசில் சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம்" கூடியது. 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்படப் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேர போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றும், சிக்காகோ சதியை இம்மாநாடு கடுமையாக கண்டித்ததோடு, 1890 மே 1 அன்று அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடப்பட்டது. இந்த அறைகூவலே மே முதல் நாளை, சர்வதேச தொழிலாளர் தினமாக, மே தினமாக அனுஷ்டிப்பதற்கு வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 18 மறக்கத்தகுமா?..

- வசந்தா ஜெகதீசன்-

மனிதம் புதைத்தோம், மரணம் விதைத்தோம்
சொந்த நாட்டிலே சுதந்திரம் இழந்தோம்
முள்ளிவாய்க்கால் குருதி நிலமாய்
கொலையின் களமாய் மே 18 மறக்கத்தகுமா?

வெந்தணலிட்டோம், வேதனை சுமந்தோம்
வேரோடு வீழ்ந்தோம், விழுதுகள் இழந்தோம்
முள்ளிவாய்க்கால் மே 18
எண்ணிட எண்ணிட குருதி கொதிக்கும்
ஈனர்கள் செயலில் இதயமே வெடிக்கும்

வெந்தணலிட்டோம், வேதனை சுமந்தோம்
வேரோடு வீழ்ந்தோம், விழுதுகள் இழந்தோம்
முள்ளிவாய்க்கால் மே 18
எண்ணிட எண்ணிட குருதி கொதிக்கும்
ஈனர்கள் செயலில் இதயமே வெடிக்கும்

பாலுக்கு அழுத பாலகர் மரணம்
பரிதாப நிலையில் உறவுகள் ஓலம்
அவலத்தின் பிடியில் அன்னை மண் கோலம்
முள்ளிவாய்க்காலில் குருதி ஆறுமே 18 மறக்கத்தகுமா?
ஈனர்கள் செயலில் ஈழமே இருளில்
ஆண்டுகள் பதினொன்று நெருப்பின் சுவாலை
எந்தன் உறவுகள் எரிந்த வேளை
முள்ளிவாய்க்காலில் மே 18 மறக்கத்தகுமா?



குருதி கொதிக்குது நரம்பு புடைக்குது
நம்மின ஓலமே எண்திசை ஒலிக்குது
அன்றைய அவலம் ரணமாய் கணமாய்
முள்ளிவாய்க்கால் மனிதம் புதைத்த
மே 18 மறக்கத்தகுமா?
வேரோடு வீழுதுகள் வெந்தணலிட்டோம்
வேதனை வெதும்பலில் வெந்து மடிந்தோம்
மே 18 வேண்டாம் எமக்கு.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் தினம்...

காடுகள் அழித்து
கழனிகளாக்கி வளம்பெற
மேடு பள்ளம் பாராது
குன்றிலும் குழியிலும்
நெற்றி வியர்வை சிந்தப்
பாடுபடும் தொழிலாளர்
வெற்றியீட்டிக் கொடுத்திடுவர்
முதலாளி வர்க்கத்துக்கு
பணம் குன்றி விழி
பிதுங்கி நிற்பதறிந்து
தொழிலாளரை அடக்கி
அதிகாரப் படுத்தி மிரட்டி
களி பேருவகையோடு
கடுமையாக வேலை வாங்கும்
முதலாளி வர்க்கம்
விழித்தெழ முழங்கிடுவீரே
மே தின நன் நாளில்
உரத்துக் குரல் எழப்பும்
தொழிலாள வர்க்கம்
உடலில் உதிரும்
உதிரம் முழவதும்
உலகினிற்கே கொடுத்திடும்
தொழிலாள வர்க்கத்தின்
உரிமைகள் சுலபமாய்பெற்று
வாழ்வு வளம்பெற நலம்பெற
இந்நாள் சிறப்புற அமையட்டும்
தொழிலாளர் ஒற்றுமை என்றும்
ஓங்கி ஒலித்து
ஒளிமயமாகட்டும்!...

திருமதி இராஜேஸ்வரி
சிவராசா.

கொலைமிரட்டும் கொரோனா...

கண்டம்விட்டுக் கண்டந்தாண்டி
கொண்டுவந்த கிருமியாக
கொலைமிரட்டும் கொரோனா
அலையாகப் பரவுவதால்
உலைபட்டு மானுடம்
உழல்கிறது நித்தமுமாய்
பல பக்கச் செய்திகள்
குலைநடுங்கும் வதந்திகள்
குண்டுக்கு மஞ்சாத
நெஞ்சுகளும் மிரண்டிங்கு
மருத்துவமும் வருத்தமுடன்
மருந்துதேடி யலைந்தவாறு
நினைத்தபடி காணொளிகள்
நிறைத்துத் தருமறிவுரைகள்
தொடர்கதையாய் பரவியிங்கு
தொலைவுகளும் நகர்ந்தபடி
தொய்வுறும் வாழ்வியலும்
தொற்றுக்களின் பீதியுடன்
பதுக்கிடும் பொருட்களினால்
பஞ்சத்தில் அங்காடிகள்
பள்ளிகளும் மூடப்படும்
பரவலான வதந்திகள்
என்னத்தைச் சொல்லியென்ன
எல்லாமே அவன்செயலாய்....

கீத்தா பரமானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே தினம்!..

சிக்காக்கோவில் சிந்திய இரத்தம் உலகத் தொழிலாளர்கள் தினம்
தொழிலாளரைப் பிரித்து விளையாடி உலக மா முதலாளிகள்
வென்று காட்டியதென்பதே உண்மை இக்கணம்
சுத்தி பிடிப்பவன் கத்திக்கொண்டே இருக்க
புத்தி வடிப்பவன் சிந்திக்கொண்டிராமலா இருப்பான்..

நீ சிறகை விரித்து செங்கரங்கள் இணைந்ததென்று
ஒற்றுமைக் கீதம் ஓங்கி எழுப்பலாம்
அவன் சங்கத் தலைவனின் அடிமடியில் கொஞ்சம்
பச்சப் பசேலைப் பருகிவிடலாம்
மூலப் பொருளுக்கு ஆளத்தெரியும் உற்பத்திகள் தனதாய் இராது...

வாழ்க்கையில் பாரம் குறைய வண்டி இழக்கும் தோழன்
சாக்கடை நீரை அள்ளிப் பூக்கடை ஆக்கும் தோழன்
கூட்டாளிகள் கொள்கைகளால் கூட்டுறவு இல்லை இனிச் சாத்திரம்
கொடுப்பதும் வேண்டாம் என்று எந்திரன் வருவது இனிச் சத்தியம்
குடிசைகளின் உழைப்பால் கோபுரங்கள் உயரும்
அந்தக் கோபுரங்கள் எண்ணுவதில்லை குடிசைகளைச் சிறிதும்...

இரும்புகளை அடித்துக் கிளப்பும் நெருப்புக்கள்
வீட்டை எரித்தாலும் விளக்கு என்று பொருள்படாது
மூலதன மூதவைகள் விழுங்கிய முழக்கங்கள் சில நேரங்களில்
அரைக் கம்பங்களில் ஆராதிக்கப்படலாம்
பிணந்தின்னும் பிற்போக்குகள் வானம் ஆள எழுந்த பின்பு
கனம் கொண்ட கற்களுக்குள் ஈரம் ஏது...

உழைப்பவனுக்கே அதிக ஊதியம் என்றால் உற்பத்திப்
பொருள்களின் உயர்வுக்கு வரி நாமே என்கிறது ஆதிக்கம்
எல்லாவற்றிற்கும் மறைமுகவரி எமது என்கிறது உழைப்புக் கரம்
வாதிடவோ வழிவகுக்கவோ அரசுகளால் முடியாது முடக்கம்
எல்லாப் பொருட்களின் தீர்வை நாம் வெளிநாடுகளில் அடக்கம்
வெளிநாடுகள் வந்துதான் அடக்கமும் செய்யனும் நம் பிணங்களை...

-ப.பசுபதிராசா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்கப்பட்ட குரல்...

ஒடுக்கப்பட்ட எங்களுக்காக
ஓராயிரம் கவிதைகள்
எழுதப்பட்டுள்ளன
அடக்கப்பட்ட எங்களுக்காக
அற்புதக் காவியங்கள்
படைக்கப்பட்டன..
எத்திசையிலும் எங்கள் குரல்
அதிகார வர்க்கத்தினரால்
முடக்கப்பட்டது
இடைவிடாமல் சத்தமாய்
இசைக்கப்படும் கருவிகளால்
எங்கள் மரண ஓலம்ஓய்வுக்கு
அனுப்பப்படுகிறது..
ஆண்களுக்கு
நிகராக ஆண்டவன்
சம உரிமை தந்தான்
அடக்கி ஆழ்வதையே
ஆணாதிக்கம் கொள்கையாக
முரசொலிக்கிறது..
எங்கள் சிந்தனையை
கருத்தோட்டத்தை சுட்டுக்
கருக்கிடவே சூட்டுக்கோல்
ஏந்துகிறார்கள் அடக்கிஆளும்
ஆணாதிக்கம்
ஆண்டாண்டுதோறும்
ஆட்சிக் கொடியேந்தி உள்ளது..
எங்கள் உரிமைகளுக்காக
எழுதப்பட்ட கவிதைகள்
நீதிச்சபையில் படிக்கப்படாமல்
இருக்கின்றன
எங்கள் புகழ்பாடும்
வார்த்தைகள் யாவும்
சாசுவதமாக
அழிக்கப்படுகின்றன!

மூன்றாம் உலகப் போர்.

இரண்டு உலகப் போர்களின்
அழிவில் உலகம் வடித்த கண்ணீர்
பூமி மேனியில் இன்னும்
ஈரமாய் இருக்கின்றது
போர் விட்டுச் சென்ற
சோகத்தைப் பூமி தன்னில்
புதைக்காமல்தலைமுறைதோறும்
சரித்திரமாய் சொல்லியது..
போர் இல்லாத பிணி இல்லாத
பிணக்கு இல்லாத
பாரதிதாசன் கனவுகண்ட
'புதியதோர் உலகம் செய்வோம்'
புரட்சி பாடலைக் கேட்க
உலகத் தலைவர்களின்
காதுகள் மந்தமாய்இருக்கின்றன..
ரத்தம் சிந்தாத இரணகளம்
இல்லாத போர்வீரர்கள் இல்லாத
புதியதோர் போர்முறைதான்உலகை
மூர்க்கமாய் ஆட்டிப்படைக்கிறது..
உயிரியல் போர் முறை மனித
உயிர்களுக்கு அபாய எச்சரிக்கை
முழக்காமல் மௌனமாக காற்றில்
உறவாடி உயிர்களைக்
களவாடி வருகிறது..
தாக்குதல் வரும் திசைஅறியாமல்
வல்லரசு யாவும் விழி பிதுங்கி
தவிக்கின்றனஉயிரியல்ஆயுதப்போர்
மகத்துவத்தைக்கசப்புமருந்தாக
சுவைக்கின்றன..
மனித விஞ்ஞானத்தின் ஏழாம்அறிவு
உயிரியல் போரை வெள்ளாவியில்
அவித்து எடுக்குமா? கோர கோவி-19
கண்களைப் பிடுங்கி எறியுமா?

ஏ எஸ் பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாய் என்றும் வாழ்க!

மழலைகள் மகிழ மாறும்
மதியொளி பெருகு மாறும்
குழவிகள் கொஞ்சு மாறும்
குளிர்த் தமிழ் விஞ்சு மாறும்
பழகிய அன்பினைச் சேர்த்து
பழங்காதை கூறு மாறும்
அழகிய புயல்நேசன் தான்
அமைத்திட்டீர் கதைச்சாறு!

தேன்கவி சொட்டு மாறும்
தீந்தமிழ்க் கொட்டு மாறும்
வான் கவி படைத்த கதாசிரியர்
வளர்கின்ற தமிழ்க்காக்க
நான் கதை படைப்பேனென்று
நாணிலம் வியக்கு மாறு
ஊனுடல் உருகத் தேனாய்
உயர் கதை படைத்தீர் இன்று!

சொட்டாகத் தேனெடுத்துச்
சுவையடை படைக்குமாப் போல்
செட்டாகத் தமிழைச் சேர்த்து
தேனாகப் படைத்தார் இன்று
கட்டாக எந்தன் கவிப் பாராட்டை
கதாசிரியருக்கே தந்தேன் முல்லை
மொட்டாக இதழ் தன்னை விரித்து
முழுமையாய் என்றும் வாழ்க!

அவிரியூர்க் கவி பாலபரணி
விழுப்புரம் மாவட்டம்
தமிழ் நாடு

வறுமையும் கொடுமையும்

வறுமையும் கொடுமையும்
வாழ்க்கையில் வந்தால்
வசந்தத்தை தந்திடும்
வாழ்வியல் பறி போகுமே!
இளமையில் வறுமை
இடர்களைத் தந்துமே
மிடிமையின் வாழ்வை
மிகையாகச் செலுத்துமே
தன்னம்பிக்கை வாழ்வு
தலையாகக் கொண்டாலும்
நம்பிக்கை வாழ்வு சுடர்விட
கொடுமையானவறுமைஒழியணும்
வறுமை வெறுமையாக்கி
ஒருமை பன்மையாக்கி
ஒளிர்கின்ற வாழ்வு
ஓரமாய்ப் போய்விடுமே
துளிர்க்கின்ற வாழ்வு
துலங்கலாய் ஒளிர
இளமையில் வறுமை
இல்லாது இருக்கணும்
கொடுமையிலும் கொடுமை
வறுமையின் பிடியில் வாடுவது
வறுமையை ஒளிக்க
வாழும் வரை போராடு
வசந்தத்தை தேடலாம்

நகுலா சிவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டில் தமிழர்...

தமிழன் போக்கைப் பற்றிச்
சொல்ல வார்த்தைகள் தானே
போதாது காக்காக் கூட்டங்கள்
போலே கூட்டமாய்
கூடிக் கும்மாளம் போடுவார்
சும்மா அக்கா அக்கா
என்று கூப்பிட்டு
தன் காரியங்களைப் பார்ப்பார்
பின் நீ என்ன கொக்கா எனக்
கேட்டுக்காலை வாரிப் போவார்...

ஐயா என்பார் வாத்தியார்
என்பார் வளைய வந்தே வால்
பிடிப்பார் வந்த காரியம் நிறை
வேறியபின்னே வாலை ஒட்ட
நறுக்கிடுவர் இதுதான் நடக்குது
புலம் பெயர் வாழ்வில்...

ஊரிலை மழைக்குக் கூட
பள்ளிகுப் போகாச் சனம்
இங்கு பாடம் படிப்பிக்குதுகள்
அடுத்தவனுக்கு
அடுத்துக் கெடுப்பதே இவன்
வேலை தண்டச் சோறு தின்பதும்
அண்டல் வேலை பார்ப்பதுமாய்
சில பேரு...

உற்ற நண்பன் போலே
வீட்டுக்குள்ளே நுழைந்து
கருவை அறுப்பவர் சில பேரு
இதில் குடும்பத்தை கெடுப்
பவனும்
குட்டி சுவராக்குபவனும்
அடுத்தவன் துணையை
பறிபவனுமாய் கெட்டிகாரார்
பல பேரு...

வடையை கண்டால்
வயிற்றை நிரப்பி
மாற்றான் மனைவி பின்னே
போறவனும் உண்டு
சோறு கண்ட இடம் சொர்க்கம் என
மாறிப் போபவரும் உண்டு...

நெறி கெட்டு அலையும்
மனிதர்களாய் புலம் பெயர்
வாழ்வில் பலர் உண்டு
ஊரிலை காணா தமிழரை
காசுப் பேய்களாய் காமப்பசி தீராத
நோயாளிகளாய் மன நோயாளிகளாய்
பொறாமை பேராசை என
வெறி கொண்டு அலையும்
மனிதர்களாய்
வெளிநாட்டில் தமிழர்!...

-கவி மீனா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் இதழ் 200 - அட்டைப் படத்துக்கானகவிதை:

கண்களெல்லாம் விரிகின்றது களிப்புகள் பிறக்கின்றது
காலங்களின் விரைவினை எம்கருத்தும் வியக்கின்றது
எண்களோ இலக்கில்லை இலச்சியங்களே நோக்காகி
இலக்கியத்தோடு மனிதநேயமும் இதமாய்த் தொடர்கிறது

புண்களுக்கு ஒளடதமாய் புகலிடத்து உறவுகளுடன்
பூப்பூத்திட்ட மண்மலரின் புலரியோடான பயணங்கள்
அண்ணாந்து பார்க்குமளவு ஆற்றுப்படுத்தும் முறைமை
ஆளுமையால் வலுப்பெற்று அகமகிழ்ந்திடச் செய்கிறது

தொண்ணூறில் தடம்பதித்து துளிர்த்தின்று தருவாகி
தொடர்கின்ற கலாசாரபண்பாட்டுப் பகிர்தலே கருவாகி
விண்ணோடு கதிர்போல விரிந்திடும் பணிகளெல்லாம்
வெளிச்சத்தில் நிஜங்களை விளம்புதல் நேர்த்தியன்றோ

பண்ணோடு இசையும் கூட்டிபடிக்கின்ற எம் பாடல்கள்
பைந்தமிழ் வாழ்த்தொலியாய்ப் பரிணமித்துப் படர்ந்திடுமே
கண்ணூறு பட்டிடாமல் கனிந்திடும் காலங்கள் எல்லாம்
கரங்களை ஒன்றாய்ப்பற்றிக் காத்திடுவோம் மண்ணினையே

-அம்பலவன்புவனேந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கமும் ஏக்கமும்

மாற்றங்களை விரும்பும் மானிடம் மனிதத்தையே மறந்தனால்
மரிப்புகள் நீளவில்லையெனும் மறுதலிப்புகள் நிஜமாகிடுமோ
சாற்றுகின்ற தரவுகளும் சமப்படுத்துதல் என்றவாதங்களும்
சாத்தியமாகிடும் எனும்சஞ்சலத்துடன் நிதமும் வாழவதோ
ஆற்றுவெள்ளத்தில் மானிடம் அடிபட்டுப்போகும் நிலையாய்
அன்றாடம் இருப்பின்நிலை அடியற்றமரமாய் ஆகிப்போமோ

தோற்றுவாய் தெரிந்துகொள்ளத் தொடருகின்ற ஆய்வலைகள்
தொலைந்திடும் வாழ்வியலின் துயர்களைக் களைந்திடுமோ
நூற்றாண்டுக்கொருமுறை நுண்கிருமித்தொற்று சூழ்ந்துவரும்
நூதனமறியாத விஞ்ஞானம் நிலைகுலைந்து போய்விடுமோ
ஊற்றாய்ப் பெருக்கெடுத்து உருவாகும் கொரோணாவினால்
உயிரழிவினைத் தடுப்பதற்கு ஒருமார்க்கம் தெரிந்திடுமோ

காற்றிலாடும் தூக்குக்கயிற்றினை கண்டிராத கைதிகளாய்
கண்கட்டியபடி தனிமையிலே கலங்கிடும்நிலை நின்றிடாதோ
நேற்றின் உயிரிழப்புகளும் நிஜங்களின் அணிவகுப்புகளும்
நேர்ந்திடுகின்ற தடுப்புகளும் நோய்ப்பரவலைத் தடுத்திடாதோ
ஆற்றாமையினால் அகிலம் அல்லலுற்றுத் தவிக்கும்நிலையில்
அறிவியலும் விஞ்ஞானமும் அம்மணமாகிப் போய்விடுமோ

ஏற்றங்களைப் பெற்றஉலகு இடிந்திருக்கும் நிலைமாறிடவே
இயற்கை வைத்தியங்கள்தான் இன்னல்களைத் தீர்த்திடுமோ
வேற்றுக்கிரகத்து ஆய்வுகளைநிறுத்தி விரிந்த பூமிப்பந்தின்
விமோசனத்திற்காய் அறிவியல் விரைந்து பணிகள்ஆற்றிடுமோ
காற்றினை வடிகட்டிட மானிடத்துக்கு காலம் விதித்தவிதியாகி
களிவுகளற்ற புதியதோர் உலகம் கண்முன்னே விரிந்திடுமோ

அம்பலவன்புவனேந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிமருந்துகளின் ஆச்சரியம்....

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இதுதான் மருந்து, புதிய கண்டுபிடிப்பெல்லாம் கிடையாது, ஒருதடவை சொன்னா சொன்னதுதான் , இந்த பாடலை ஒவ்வொரு வரும் எழதி வைத்து கொள்ளுங்கள், எக்காலத்திலும் உதவும், இப்பாடல் அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடலில் இருந்து எடுக்கப்பட்டது சித்த மருத்துவர் பாக்கம் தமிழன் தமிழ் மருத்துவ அறிவுரைப்பா

மூளைக்கு வல்லாரை முடிவளர நீலிநெல்லி ஈளைக்கு முசுமுசுக்கை எலும்பிற்கு இளம்பிரண்டை பல்லுக்கு வேலாலன் பசிக்குசீரகமிஞ்சி கல்லீரலுக்கு கரிசாலை காமாலைக்கு கீழாநெல்லி கண்ணுக்கு நந்தியாவட்டை காதுக்கு சுக்குமருள் தொண்டைக்கு அக்கரகாரம் தோலுக்கு அருகுவேம்பு நரம்பிற்கு அமுக்குரான் நாசிக்கு நொச்சிதும்பை உதிரத்திற்கு முருங்கைப்பூ ஊதலுக்கு நீர்முள்ளி முகத்திற்கு சந்தனநெய் மூட்டுக்கு முடக்கறுத்தான் அகத்திற்கு மருதம்பட்டை அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை உணர்ச்சிக்கு நிலப்பனை குடலுக்கு ஆமணக்கு கொழப்பெதிர்க்க வெண்பூண்டே கருப்பைக்கு அசோகுப்பட்டை களைப்பிற்கு சீந்திலுப்பு குருதிக்கு அத்திப்பழம் குரலுக்கு தேன்மிளகே! விந்திற்கு ஓரிதழ்தாமரை வெள்ளைக்கு கற்றாழை சிந்தைக்கு தாமரைப்பூ சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை கக்குவானுக்கு வசம்புத்தூள் காய்ச்சலுக்கு நிலவேம்பு விக்கலுக்கு மயிலிறகு வாய்ப்புண்ணிற்கு மணத்தக்காளி நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர் நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்.

வேர்க்குருவிற்கு பனைநுங்கு நீ வெட்டைக்கு சிறுசெருப்படையே தீப்புண்ணா குங்கிலிய வெண்ணை சீழ்காதுக்கு நிலவேம்பு நாப்புண்ணிற்கு திரிபலாவேலன் நஞ்செதிர்க்க அவரிஎட்டி குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான் குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர் பெரும்பாட்டிற்கு அத்திநாவல் பெருவயிறுக்கு மூக்கிரட்டை கக்கலுக்கு எலுமிச்சை ஏலம் கழிச்சலுக்கு தயிர்சுண்டை அக்கிக்கு வெண்பூசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மைக்கு பூனைக்காலி வெண்படைக்கு பூவரசு கார்போகி விதைநோயா கழற்சிவிதை புண்படைக்கு புங்கன்சீமையகத்தி புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு கால்வெடிப்பா மருதாணி கிளிஞ்சல் கரும்படை வெட்பாலைசிரட்டை கால்சொறிக்கு வெங்காரபனிநீர் கானாகடிக்கு குப்பைமேனி உப்பே உடல்பெருக்க உளுந்து எள்ளு உளம் மயக்க கஞ்சாகள்ளு உடல்இளைக்க தேன்கொள்ளு உடல் மறக்க இலங்கநெய்யே அருந்தமிழர் வாழ்வியலில் அன்றாடம் சிறுபிணிக்கு அருமருந்தாய் வழங்கியதை அறிந்தவரை உரைத்தேனே!!

மதம் இல்லாத கடவுள்!...

கடவுளை மறுக்கும் மதம் கடவுள் இல்லாத மார்க்கம் காலச் சுவடியில் கண்டெடுக்கப்பட்டது தன் ஞானம் அறியாதவர் மெய்ஞானம் காண தவநெறி பூண்டு மதத்தை தள்ளி வைத்தார் இயற்கையோடு இணைந்த அருளாலர் மதப் பிடியிலிருந்து விடுபட்டார் ஊரும் உலகமும் கட்டியெழுப்பிய மதக் கோயில்கள் மண் கோயில்களாக மதமற்றவர்களின் கால்களில் இடிந்து வீழ்ந்தன..

வர்க்க பேதத்தை வளர்த்த மார்க்க முறைகளின் வஞ்சனை வலையில் மந்தை மனிதர் மீனாக சிக்கினர் 'மதம்' வளர்த்த மதத்தை மெய்யறிவாளர்கள் மிதியடியில் மிதித்தனர் இதயத்தில் கோயில் கட்டாத மனிதர்களை ஊர்க்கோடியில் புதைத்தனர்.. உலகைப் படைத்தாளும் மாபெரும் சக்தியை மதத்தலைவர்கள் கைப்பற்றி கருங்கல் கோயில்களில் அமங்கலமாக கைது செய்து அடைத்தனர்... மதம் இல்லாத கடவுளைத் தேடு கடவுள் காட்சியளிப்பார்! இனவெறி மதவெறி இல்லாத உள்ளங்களில் கடவுள் அவதரிப்பார் மனிதா நீ மாறு!

-பிரான்சிஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியரும் மாணவரும்!....

ஒரு டீச்சர் தன் வகுப்பு மாணவர்களிடம் வெற்றுத் தாள்களைக் கொடுத்து.. ஒவ்வொருவரையும்.. வகுப்பில் உள்ள மற்ற மாணவர்கள் அனைவரின் பெயரையும் அதில் எழதச் சொன்னார். ஒரு பெயருக்கும்.. அடுத்த பெயருக்கும் இடையே சிறிது இடைவெளியுடன் ! மாணவர்கள் எழதி முடித்தவுடன்.. டீச்சர் சொல்கிறார்.. ஒவ்வொரு பெயருக்கும் எதிரே.. அவர்களிடம் நீங்கள் காணும்.. "உங்களுக்கு பிடித்த நல்ல விஷயம் ஒன்றைப்பற்றி எழதுங்கள்.'' மாணவர்கள் ஒவ்வொருவரும்.. யோசித்து.. தங்களுக்கு தோன்றியதை எல்லாம் எழதிக் கொடுத்தனர்.

வாரக் கடைசி டீச்சர் ஒவ்வொரு மாணவனின் பெயரிலும் ஒரு தாள் தயார் செய்து.. அதில் மற்ற மாணவர்கள் அவனைப்பற்றி எழதியிருந்த உயர்வான வார்த்தைகளை வரிசையாகத் தொகுத்து எழதி கீழே தன் கையெழத்தையும் போட்டு.. மாணவர்கள் ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் பெயரிட்ட தாளைக் கொடுத்தார்... மாணவர்கள் அவரவர் இடத்திற்கு சென்று அமர்ந்து படிக்கிறார்கள்...

10 நிமிடங்கள் வகுப்பறையே சந்தோஷக் கடலில் மிதக்கிறது.. "நான் இவ்வளவு சிறப்பானவனா..? என்னைப் பற்றி மற்றவர்கள் இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருக்கிறார்களா? அத்தனை மாணவர்களும் ஆனந்தத்தில் திளைக்கிறார்கள்.

அந்த பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ள குணாதிசயங்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள்.. தன்னைப்பற்றி உயர்வாகச் சொன்னதற்காக.. ஒவ்வொரு மாணவனுக்கும்..சக மாணவர்கள் மேல் அன்பு அதிகரிக்கிறது... பல வருடங்கள் கழிகின்றன. அந்த வகுப்பில் படித்த மாணவன் ஒருவன் வளர்ந்த பிறகு ராணுவத்தில் சேர்கிறான். பிறகு போர் ஒன்றில் வீர சாகசம் புரிந்து.. மரணம் அடைகிறான்... அவன் உடல் ராணுவ மரியாதையுடன் சொந்த ஊர் கொண்டு வரப்படுகிறது... இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அந்த டீச்சரும் செல்கிறார்... மிடுக்கான ராணுவ உடையில் நாட்டின் தேசியக்கொடி போர்த்தப்பட்டு.. சவப்பெட்டியிலும் கம்பீரத்துடன் காணப்பட்ட அந்த மாணவனைக் கண்டு பெருமிதத்துடன் கண் கலங்குகிறார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவராக வரிசையில் வந்து இறுதி மரியாதை செலுத்துகின்றனர்... டீச்சர் கடைசியாகச் செல்கிறார்... பின்னர்.. பக்கத்திலேயே நிற்கிறார்... உடலைத் தாங்கி வந்த ராணுவ சக வீரர்கள் அருகிலேயே நின்றிருந்தனர்...

ஒரு வீரர் கேட்கிறார் "நீங்கள் சரவணனின் 10ஆம் வகுப்பு டீச்சரா?" என்று. டீச்சர் ஆம் என்று தலையசைக்கிறார்.. பின்னர் அந்த ராணுவ வீரன் சொல்கிறான் "டீச்சர் எனக்கு உங்களைத் தெரியும்... சரவணன் உங்களைப்பற்றி எப்போதும் சொல்லிக்கொண்டே இருப்பான்.. சடங்குகள் முடிந்த பின்னர்.. சரவணனின் பழைய வகுப்புத் தோழர்கள் அங்கு டீச்சருடன் ஒன்றாக நின்றிருந்தனர்.. அங்கு சரவணனின் தாயும் தந்தையும் வருகின்றனர்.. அந்த சோகத்திலும் தந்தை டீச்சரிடம் கூறுகிறார் .. "டீச்சர் நான் உங்களுக்கு ஒன்றைக் காட்ட வேண்டும்... இது சரவணன் போரில் கொல்லப்பட்டபோது அவனது பாக்கெட்டிலிருந்து இறுதியாக கண்டெடுக்கப்பட்டது". அவர் காட்டியது.. பெரிய பர்ஸ் ஒன்றில் பத்திரமாக..

பல முறை மடிக்கப்பட்டு.. மடிப்புகள் எல்லாம் டேப் போட்டு ஒட்டப்பட்டு.. பத்திரமாக பாதுகாக்கப்பட்ட ஒரு தாள்... ஆமாம் பல வருடங்களுக்கு முன்னர் அந்த டீச்சர் சரவணனைப் பற்றிய நல்ல குணங்களை வரிசைப்படுத்தி தொகுத்து எழுதிக் கொடுத்திருந்த அதே காகிதம் தான்...! கண்ணீர்ப் பெருக்குடன் சரவணனின் தாய் கூறுகிறார் ..ரொம்ப நன்றி டீச்சர் உங்கள் கடிதத்தை அவன் உயிரையும்விட மேலாக விரும்பினான்... இத்தனை வருடங்களும் அதை அவ்வளவு பத்திரமாக பாதுகாத்து வந்தான்... 'அவனுக்கு வாழ்க்கையில் மிகுந்த தன்னம்பிக்கையும்.. பிடிப்பும் ஏற்பட இந்த காகிதம் தான் உதவியது.

டீச்சரும் மற்ற மாணவர்களும் சரவணனை நினைத்து கதறி அழகின்றனர்.. ஆம்..என் இனிய நண்பர்களே..! உறவுகளே..! இந்த வாழ்க்கைப் பாதை கரடு முரடானது... எங்கே துவங்கும் எப்படி இருக்கும் எப்போது எப்படி முடியும்.. ? யாருக்கும் தெரியாது... இருக்கின்ற காலத்தில் நம்முடன் இருப்பவர்களை அவர்களின் நல்ல இயல்புகளுக்காக நேசிப்போம்... நல்லதும் கெட்டதும் கலந்தது தான் மனித குணம்... ஒருவர் விரும்பத்தகாத குணத்தைக் கொண்டிருந்தால்.. நாம் அதை விரும்பவில்லை என்பதை எரிச்சல் காரணமாக.. அநேகமாக உடனேயே வெளிப்படுத்தி விடுகிறோம்... பாராட்டுதல் அவர்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையை கொடுக்கும்... நல்ல குணங்கள் மேலும் மேம்பட உதவும்.. தோழமை உணர்வு அதிகப்பட உதவும்... மனிதர்களை மேலும் நல்லவர்களாக உருவாக்க இது உதவும் உறவுகளே..!

ஆனால்.. ஒருவரிடம் உள்ள நற்பண்புகளை.. குணங்களை.. அநேகமாக நாம் வெளிப்படையாக பாராட்டத் தவறி விடுகிறோம்... கூடாது என்றல்ல. அதன் அவசியம் நமக்குத் தெரிவதில்லை. சாம்பாரில் சற்று உப்பு அதிகமாக இருந்தால் கூட உடனடியாக மனைவியிடம் அதைக்கூறும் கணவர்கள்.. அந்த சமையல் நன்றாக இருக்கும்போது பாராட்டுவது இல்லை..! பாராட்ட வேண்டும் என்று தோன்றுவதில்லை..! இந்த உலகில் அனைத்து உயிர்களுமே.. பாராட்டுதலை எதிர்பார்க்கிறது.. கிடைத்தால் சந்தோஷப்படுகிறது..! நீங்களோ நானோ இந்த முகநூலில் கூட லைக்கோ... கமெண்ட்ஷோ சின்ன பிள்ளை தனமா ஆசை படுவது இல்லையா....! யாருமே அதற்கு விதிவிலக்கல்ல..வெளிப்படையான பாராட்டுதல் அவர்களிடையே தன்னம்பிக்கையை கொடுக்கும்... நல்ல குணங்கள் மேலும் மேம்பட உதவும்.. தோழமை உணர்வு அதிகப்பட உதவும்... மனிதர்களை மேலும் நல்லவர்களாக உருவாக்க இது உதவும் உறவுகளே..!

கணக்குப்புதிர் விடைகள்

9	-	2	-	4	= 3
+	0	+	0	+	0
4	-	5	+	2	=1
-	0	-	0	-	0
4	+	4	+	1	= 9
=9	0	=3	0	=5	0

11	+	68	-	47	= 32
-	0	+	0	-	0
5	+	13	+	42	=60
-	0	-	0	x	0
2	+	30	:	4	= 8
=4	0	=51	0	=20	0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பட்ட வாழ்க்கை....

-கெங்கா ஸ்டான்லி-

திருவிழாவுக்கு நல்ல சனக் கூட்டம் ,நாதஸ் வரக் கச்சேரி அமர்களம் ஏழ கூட்டம் மேளம் மக்களெல்லாம் மயங்கி நிற்கின்றார்கள். எல்லோரும் தம்மை மறந்த நிலை. அப்பொழுது தான் நந்தன் இசையை ரசித்தபடி நின்றவன் திரும்பிய பொழுது 100 வாட்ஸ் பல்பு மாதிரி இரு கண்களின் ஒளி அவளைக் கவர்ந்தது.அந்த ஒளியின் முகத்தைப் பார்த்தான் ஆஹா என்ன அழகு தேவதை போல பெண்ணொருத்தி அங்கே நின்றிருந்தாள். எல்லோரும் நாதஸ்வரத்தில் மூழ்கி இருக்க நந்தன் மட்டும் அந்தப்பெண்ணின் அழகில் மயங்கி நின்றான்.

கச்சேரி முடிய சாமியும் அசைய யாரோ அவனை இடிக்க. அப்ப தான் அவன் சுய நினைவிற்கு திரும்பினான். சுயத்திற்கு வந்த பின் தான் தான் எங்கே நிற்கிறேன் தெரிந்தது. அவன் ஜன நெரிச்சலில் தள்ளப்பட்டு வந்து விட்டான். அந்த தேவதையைக் கானவில்லை. ஏமாற்றத்தோடு சாமிகும்பிட்டுவிட்டு வீடு வந்துவிட்டான்.நந்தன் அம்மாவிடம் நான் ஒரு பெண்ணைக்கோவிலில்பார்த்தேன் எனக்கு பிடித்திருந்தது என்றான்

அம்மா யார் அந்தப் பெண். அவளுடன் கதைத்தியா.நந்தன் இல்லை சும்மா பார்த்தேன். ஒரு கணம் தான்.

அம்மா அப்ப நாளைக்கு நீங்களும் வாங்கோ கோவிலுக்கு அந்த பெண் வந்தால் பார்போம் என்றான் நந்தன். நந்தன் லண்டனில்வசிக்கிறான் அவனுக்கு பெண் பார்க்கவேண்டும். கோவில் திருவிழாக்கு வந்தால் திருவிழாவும் பார்த்தமாதிரி, பெண்ணும் பார்த்தமாதிரி என்று ஊருக்கு சொல்லி அம்மா சொல்ல நந்தனும் லீவு எடுத்து கொண்டு வந்துவிட்டான்.அம்மாவும் சில வரன்கள் பார்த்திருந்தாள். சில பொருத்தமில்லை ,சில பொருத்த மென்றால் நந்தனுக்கு பிடிக்கவில்லை இப்படி தட்டிக் கொண்டு போனது.

அன்று நந்தன் கோவிலில் கண்ட பெண், நடிகை கீர்த்தி சுரேஷ் மாதிரி ,அடக்கமாக, அழகுடன் தென்பட்டாள். இரவு முழக்க நந்தனுக்கு நித்திரை இல்லை. எப்போ விடியும் அம்மாவுடன் கோவிலுக்கு போகவேண்டும் என்ற நினைவிலே காலை வரை தூங்காமல் .எப்படியோ தூங்கி விட்டான்.காலை அம்மா வந்து தட்டிஎழப்பிய பின் தான் பார்த்தான் மணி 9 ஆகிவிட்டது. எழந்து காலை கடன் முடித்து, குளித்துவிட்டு அம்மா செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்லியை சுடசுட சாப்பிட்டான் .சாப்பிடும் போது அம்மா இன்று பின்னேரம் கோவிலுக்கு போவம் என்று சொன்னா.அம்மா சொன்னதிலிருந்து அவனுக்கு ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு மணித்தியாலமாக இருந்தது. மாலையும் வந்தது.

மாலையில் அம்மாவுடன் நந்தன் கோவிலுக்கு சென்றான். கூட்டத்தில் அவன் கண்கள் அந்த மின்சார பல்ப் கண்களைத் தேடினான்.அம்மாவுடன் அர்ச்சனை செய்துவிட்டு திரும்பும் போது நந்தன் திடுக்கிட்டு விட்டான். காரணம் நேரே தான் அன்று கண்ட அதே பெண் அழகான மஞ்சள் உடையில் ,தலைநிறைய கனகாம்பரம் பூவும் வைத்து தேவதையாக நின்றிருந்தாள் கண் மூடி இறைவனை வணங்கியபடி. நந்தனுக்கோ பெரிய மகிழ்ச்சியும்

ஆச்சரியமும். அம்மாவை தட்டி அந்தப் பெண்ணைக் காட்டினான். அம்மாவும் பார்த்தான். அவள் மகாலட்சுமியாட்டம் இருகிறாளே. முருகா இந்தப்பேண்ணையேஎனது மகனுககு கொடுத்துவிடு என்று வணங்கினாள்.நந்தனின் அம்மா திரும்பிப்பார்க்கையில் அந்தப் பெண்ணுடன் பக்கத்தில் இருவர் கதைத்துக் கொண்டிருந்தனர். நந்தனுடைய அம்மாவுக்கு அவர்களைத் தெரிந்திருந்தது. அவர்களுடன்பேச்சுக் கொடுத்தாள்.

இடையில் பக்கத்தில் நின்ற அந்தப் பெண்ணை வினவ. அவர்கள் அவ மிதிலா,எங்கள் உறவு, கொழும்பில் இருகிறார்கள். திருவிழா பார்ப்பதற்காக வந்திருக்கிறா. சிறிது நேரம் கதைத்துவிட்டு விடைபெற்று சென்றனர், கோவிலிலிருந்து வீடு திரும்பும் போது அம்மா நந்தனிடம் சொன்னாள்எனக்கு தெரிந்தவர்களுடைய சொந்தகாரப் பெண்ணாம்.வேறு ஒன்றும் கேட்கவில்லை. அவவுடைய நண்பியை எனக்குத் தெரியும். அவள் மூலமாக அந்தப் பெண்ணை பற்றிக் கேட்கலாம். வீடும் வந்து சேர்ந்தார்கள்.

அன்று இரவு முழக்க நந்தன் நித்திரை கொள்ளவில்லை. கற்பனை உலகில் மிதந்தான். ஆனால் இடையில் ஒரு யோசனை இது சாத்தியமாகுமா? இவன் இப்படி நினைக்க அம்மா மகனுடைய மனநிலை புரிந்தவள் எப்படியும் அந்தப் பெண்ணையே நந்தனுக்கு பேசி முடிக்கவேண்டும் என்று நினைத்தாள். பொருந்தவேண்டும்,அவர்களும் ஓம் பட வேண்டுமே! வேறு ஏதாவது காதல் என்று இருந்தால் .சரி கதைத்து பார்ப்பம். விதி என்ன எழதப்பட்டிருக்கோ அதுவே நடக்கும், என கடவுளைக் கும்பிட்டுவிட்டு நித்திரையாகி விட்டாள்.இரவு நீண்டது. அடுத்த நாள் விடிய கோழி கூவும்போது அம்மா விழித்தெழந்து,குளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழகி விடிய காலமை பூஜை பார்த்துவிட்டு வீடு வந்து விட்டாள். நந்தன் எழம்பி அம்மாவின் வரவுக்காய் காவலிருந்தான். அம்மா வந்து இட்லியும் காப்பியும் கொடுத்தாள்.மகன் வெளிநாட்டில் இப்படியெல்லாம் சாப்பிடமாட்டான் இங்கு நிற்கும்போது செய்து கொடுப்பொம் என்று வகைவகையாக உணவு செய்து கொடுத்தாள்.

அம்மா தனது நண்பியிடம் தாம் பார்த்த பெண்ணைப் பற்றி சொல்லி, நந்தனுக்கு அந்தப் பெண்ணைப் பேசி முடிக்கலாம் என சொன்னபோது நண்பி சொன்னாள் கொஞ்சம் பொறு எல்லாம் விசாரித்த பின் யோசிக்கலாம். தான் விசாரிப்பதாகச் சொன்னாள். சில நாட்களில் அந்த நண்பி நந்தனின் அம்மாவிடம் சொன்னாள் எல்லாம் விசாரித்தேன் உங்களுக்கு கேற்ற குடும்பம்தான், ஆனால் அந்தப் பெண்ணின் அக்காவிற்கு திருமணத்திற்கு நாள் வைதாயிற்றாம் என்ன சொல்வர்களோ தெரியாதாம் கேட்டுச் சொல்வதாகச் சொன்னா. அவ எடுத்து சொன்னதும் நான் போன் பண்ணுகின்றேன் என்று சொன்னாள்.

அடுத்த நாள் காலையே பதில் வந்தது. பார்க்கலாம் என்று, பிறகென்ன பொருத்தம் பார்த்து, பொருத்தம் என்று சொன்னபின் பெண்ணின் பெற்றார் வந்து வரனைப் பார்த்து, எல்லாம் சரிஎன்ற பின் சம்பந்தம் கலந்தார்கள். நந்தனின் லீவும் முடிவதால் எழத்து எழதிவிட்டு போய் அடுத்த வருடம் வந்து திருமணம் செய்யலாம் என முடிவெடுக்கபட்டது. நந்தனுக்கு பெரிய சந்தோஷம். அம்மாவுக்கு ஆயிரம் முத்தம் க்கொடுத்து நன்றி சொன்னான்.

அம்மாவும் மகன் ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைத்தது என மகிழ்ச்சியில் கோவிலில் பெரிய அபிஷேகமே செய்து விட்டாள். கடவுள் தான்,தனது சந்நிதியில் எனது மகனுக்கு பெண் அமைய வேண்டுமென் அருள் புரிந்தார் எனக் கடவுளுக்கு நன்றி சொன்னாள். பிறகென்ன ரெஜிஸ்ரேசன் தடல்புடலாக நடந்தது. பெண்ணும் மாப்பிளையும் ஒருத்தருடன் ஒருத்தர் பேசி ப் பழகினர்.

நந்தனும் வெளிகிடும் நாள் வந்தது. அடுத்த வருடம் வந்து திருமணம் செய்து கொண்டு மனைவியையும் கூட்டிச்செல்வதாக ஒப்பந்தம். மிதிலாவுக்கு கவலை நந்தனைப் பிரிவது. நந்தனுக்கும் அப் படித் தான் .பரவாயில் லை அடுத்த வருடம் கடகடவென வந்துவிடும். நாம் வாட்ஸ் அப் இல் கதைப்போம் என் ஆறுதல் கூறிவிட்டு விடைபெற்றான்.மனதில் மகிழ்ச்சி தான் ஆசைப்பட்ட வாழ்க்கை கிடைத்ததே எனக் கடவுளுகு நன்றி சொல்லிய படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

9	1	7	5	2	4	6	8	3
8	3	6	1	9	7	4	2	5
5	4	2	8	3	6	1	7	9
3	5	1	6	4	8	7	9	2
4	2	9	3	7	1	8	5	6
6	7	8	9	5	2	3	4	1
7	8	5	2	1	3	9	6	4
1	9	4	7	6	5	2	3	8
2	6	3	4	8	9	5	1	7

சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

கோ	வி	ட்	க
வி	ல்	செ	ல்
ரு	லி	க	வி
அ	எ	ல்	பா

குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

தொ	ழி	லா	ள	ர்	யி	ப
ன்	ன	ன்	ம	யி	ல்	ட்
மை	ர்	ணீ	ண்	த	ட்	டு
வ	ள்	ளூ	வ	ர்	இ	டு
ட்	உ	டு	ர	த	த்	ட்
வி	ண்	ண்	லா	த்	தா	லா
கோ	மை	ஆ	று	பு	லி	தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நிலமை.....

(கலைவாணி. ஏகானந்தராஜா)

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே ஊருக்குச் சென்றதால் அருமையான காலநிலை அமைந்திருந்தது. அப்போதெல்லாம் கொறோனா பற்றிய பீதி எதுவும் இருக்கவில்லை. மட்டக்களப்பில் சில பாடசாலைகளுக்கு உதவி தேவைப்படுவதாக "வாசம்" உதவும் கரங்கள் அமைப்பாளர் தொடர்பு கொண்டிருந்தார். வாகரை என்ற பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் 10ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கு கஷ்டம் காரணமாக உள்ளாடைகள் வாங்குவதற்கு முடிவதில்லை என தெரிவித்திருந்தார்.

வாகரையில் உள்ள சில பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு நிலமையை அறிந்துகொண்டோம். ஒரு பாடசாலையில் 120 மாணவர்களுக்கும் மற்றுமொரு பாடசாலையில் 50 மாணவர்களுக்கும் அத்தியவசியமான உள்ளாடைகள் வாங்கித்தரும்படி கேட்டிருந்தனர். ஆண் பெண் கலவன் பாடசாலைகளில் இந்த நிலமையை கண்டு அதிசயித்தோம்.ஜேர்மனி வீட்சே நகரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட"உதவும் இதயங்கள்" அமைப்பில் சேரக்கப்பட்ட பணம் 37 ஆயிரம் ரூபாவில் அத்தனை மாணவர்களுக்குமான மாற்று உள்ளாடைகளை வாங்கிச்சென்று கொடுத்தோம். அந்தப் பாடசாலை வாகரையின் உட்பிரதேசத்தில் (மாங்கேணி) இருப்பதால் மாணவர்களுக்கான போக்குவரத்து கஷ்டங்களையும் அம் மாணவர்களின் பொருளாதார கஷ்டங்களையும் நேரில் பார்த்து மிக வருந்தினோம்.

பெரும்பான்மையான குடும்பங்கள் தோட்டத் தொழிளாளர்களாகவும் வயல்களில் கூலிவேலை செய்பவர்களாகவும் இருப்பதால் காலை உணவு அருந்தாமலே பாடசாலைக்கு வருகின்றனர். சிலர் பல மைல் தூரத்திலிருந்து நடந்தே வருகின்றனர். இவர்களிடம் ஒரு சயிக்கிள் வாங்கப் பணம் இல்லை. உதவியாக கிடைத்த சயிக்கிளுக்கு ரயர் மாத்தவோ ஒட்டுப்போடுவதற்கோ தேவையான பொருட்களோ உபகரணங்களோ அவர்களிடம் இல்லை. இதைவிட தண்ணீர் கஷ்டம். பாடசாலை வளவில் ஒரு குளாய் கிணறு உள்ளது இதிலே தான் பொது மக்களும் தண்ணீர் எடுத்து வந்தனர். தற்போது கைப்பம் பழுதடைந்த நிலையில் நீர் எடுக்க முடியாமல் தவிக்கின்றனர். மோட்டர் வாங்கித் தரும்படி வேண்டிக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை முடிந்ததும் மாணவர்கள் மாடு மேய்ப்பதற்கும் சிறு கூலி வேலைகளுக்கும் செல்கின்றனர். அதனால் வீடுகளில் தங்கியுள்ள பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை .பல சிறார்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதனை ஆசிரியர்களிடம் சொல்லி அழவதாக ஆசிரியை ஒருவர் கூறியபோது எமக்கு நெஞ்சு வலித்தது. இது தவிர வேறு மதத்தவரின் ஆதிக்கமும் இந்த இடங்களில் அதிகமாக காணப்படுகிறது.

விதைக்காத நிலங்களைப் பிடித்து வயல் செய்வதும் பக்கத்து வயல்காரரிடம் நெல்லை குறைந்த விலையில் கொள்வனவு செய்து அவர்கள் பணம் ஈட்டுவது போன்ற அநியாயங்கள் அங்கு சகஜமாகிவிட்டதாம். இது மட்டுமா ..உள் பிரதேசங்களுக்குள்ளும் போதை வஸ்துகளை கொண்டு சென்று விற்கின்றார்களாம். இவற்றை எல்லாம் கேட்டு நெஞ்சு குமுறியது. அரசாங்கமோ அரசியல்வாதிகளே இந்த கஷ்டப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை. இது தான் மனவருத்தத்துக்குரிய விடயம்.

வவுணதீவு, கரடியனாறு, பறங்கியாமடு என்கிற இடங்களை பெரும்பாலானோர் கேள்விப்பட்டே இருக்கமாட்டார்கள். இந்த பிரதேச மக்களுக்குப் பெரும்பாலும் கடற்றொழிலும் வயல்களில் கூலிவேலை செய்வதுமே தொழிலாகும். இத்தகைய வீடுகளை சென்று பார்த்தால் இப்படியும் வாழ்கிறார்களா?.. என்று வியப்பாக இருக்கும். அனேகமாக அங்கு குடிசை வீடுகளே தான். அவை மண் தரைகளாகவும் கூரைகள் வேயப்படாது மழைகாலங்களில் வசிப்பதற்கு தகுதியற்ற வீடுகளாகவே காணப்படுகின்றன. குடி தண்ணீருக்கான கிணறுகளும் இல்லை. மலசலகூடங்களும் இல்லை. நாளாந்த கூலிக்காக வயலுக்கு சென்று கிடைப்பதை வைத்து காலத்தை போக்குகிறார்கள் .

வேலை கிடைக்காத நாட்களில் பட்டினிதான். "பிள்ளை பசியில் அழகிறதே" என்னசெய்வீர்கள் எனக் கேட்டதற்கு அது "அழது களைத்துத் தூங்கிவிடும்" என்று சென்னபோது நெஞ்சு வலித்தது. சில வீடுகளில் பகல் முழவதும் பனங்காட்டுக்குள் அலைந்து திரிந்து தானாக விழந்து முளைத்த பனம்கிழங்குகளை கிளறிவந்து ஒரு நேரம் சாப்பாடாக அவித்துச் சாப்பிட்டு தூங்கும் நிகழ்வுதான். சிலர் கரை வலை இழப்பதற்கு கை கொடுத்தால் ஒரு நேரத்துக்கு மீன் கிடைக்குமாம். இல்லையேல் பிள்ளைகள் கடற்கரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டில் போட்டோ... துணிகளால் ஏந்தியோ மீனைக் கொண்டுவந்தால்தான் அன்றைய தினம் உணவு கிடைக்கும். அரிவிவெட்டுங் காலங்களில் வயலோரங்களில் விடப்பட்ட நெல்கதிர்களையும் நெல்மூட்டை கட்டும்போது சிதறுண்ட நெல்மணிகளையும் பொறுக்கிவந்து அதனை அரிசியாக்கி மிளகாயுடனோ தேங்காய் சொட்டுடனோ சாப்பிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது. அரிவிவெட்டுங் காலங்களில் வயலோரங்களில் விடப்பட்ட நெல்கதிர்களையும் நெல்மூட்டை கட்டும்போது சிதறுண்ட நெல்மணிகளையும் பொறுக்கிவந்து அதனை அரிசியாக்கி மிளகாயுடனோ தேங்காய் சொட்டுடனோ சாப்பிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

யாழ்ப்பாண மக்களுக்கு எந்த பொருட் தட்டுப்பாடுகளும் இல்லை. பாண் விநியோகிக்கும் வான் காலையில் மூன்று தடவை மாலையில் மூன்று தடவை வீட்டு வாசலுக்கே வருகிறது. மரக்கறிகள் முட்டை மீன் வியாபாரிகள் சிறிய மூலைமுடுக்கு ஒழுங்கைகளெல்லாம் கொண்டு சென்று விற்கிறார்கள். இன்று கொறோனாவின் தாக்கத்தினால் சில நன்மைகளும் ஏற்பட்டிருக்கிறன என்று மனம் சற்று ஆறுதலடைகின்றது. குடும்பங்கள் வீட்டில் ஒன்றாக இருப்பது போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதற்கும் பெண்பிள்ளைகளுக்கு பெற்றோரின் அன்பும் பாதுகாப்பும் கிடைப்பது மனதுக்கு சற்று ஆறுதலே . ஆனாலும் இது எத்தனை காலத்துக்கு? பழையகுருடி கதவைத் திறவடி என்று மீண்டும் இவை எல்லாம் தொடரத்தான் போகிறது.

யாழ்ப்பாணத்தில் கொறோனா தொற்று கட்டுப்படுத்தலுக்காக ஊரடங்கு சட்டம் போடப்பட்டிருந்தது. தளர்த்தும் நேரங்கள் மக்கள் ஓடி ஓடி பொருட்களை வாங்குவார்கள். பேற்றோல் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் மக்கள். இதைவிடக் கொடுமை மதுபானக்கடைகளில் முண்டியடித்துக் கொள்ளும் எம் மக்கள். ஆமி பொலிஸ் உத்தியோகத்தருக்கு நாம் ஒரு சல்யூட் அடிக்கலாம். சிறப்பாக பாதுகாப்பு கட்டுப்பாடுகளை மேற்கொண்டமையை என் கண்களால் பார்த்தேன். ஊரடங்கு சட்டத்துக்கு முன்பெல்லாம் யாழ்ப்பாணத்தை உலுக்கிய வாள்வெட்டுக் கோஷ்டியையும் வீடு புகுந்து கொள்ளையடிப்பதையும் கொறோனா கட்டுப்படுத்திவிட்டது என்றுதான் கூறவேண்டும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண சாராயத் தவறணைகளில் அலைமோதும் பெருங்குடிமக்கள்





மட்டக்களப்பு-வாகரை-மாங்கேணி பாடசாலையில் மண் சஞ்சிகையின் எழுத்தாளர் திருமதி கலைவாணி ஏகானந்தராசா குடும்பத்தவர்களின் உதவும் கரம் பணியில்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேர்மனி - எசன் நகர தமிழ் பாடசாலையின் வருடாந்த பேச்சு, சித்திர, தமிழ்திறன் போட்டிகள் -2020

புலம்பெயர் தேசங்களில் தமிழ்மொழிக்கல்வி தொடரவேண்டும் தமிழர் வரலாறு, பண்பாடு, கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் கடந்த 31 ஆண்டுகளாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் எசன் தமிழ்மொழிச் சேவை கலாசார மன்றம் எசன் தமிழ் பாடசாலையின் வருடாவருடம் நடைபெறுகின்ற பேச்சு, சித்திர, தமிழ்திறன் போட்டிகள் இம்முறை 21.02.2020 அன்று காலை 9.30 மணிக்கு Schmitz str.8 Essen என்ற இடத்தில் மன்ற தலைவர் திரு சி. சிவஅருள் தலைமையில் போட்டிகள் ஆரம்பமாகியது.

நாற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பிறந்த ஆண்டின் அடிப்படையில் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டிகளில் மாணவர்களின் திறமைகள் வெளிப்பட்டன. பல அறிஞர்கள, கல்வியாளர்கள் நடுவர்களாக கலந்து சிறப்பித்திருந்தார்கள். சித்திரப்போட்டி, பேச்சுப்போட்டி, தமிழ்த்திறன்போட்டி, பொது அறிவுப்போட்டி என நடைபெற்றன. காலை தொடக்கம் மாலைவரை மிகவிறுவிறுப்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் பரிசளிக்கப்பட்டன. பங்குகொண்ட மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகள் நிறைவுபெற்றதும் நடுவர்களாக கடமைபுரிந்தவர்களில் சிலர் மாணவர்களின் பேச்சின் வெளிப்பாடுகள், குறை நிறைகளையும் பாடசாலையின் சிறப்பு பற்றி பேசினார்கள். கடந்த முப்பத்தொரு ஆண்டுகளாக இப்பாடசாலை தமிழக்கும் தமிழினத்துக்கும் ஆற்றிவரும் கல்வி, கலை, பண்பாட்டுப் பணிகள் பற்றியும் நிர்வாகிகள் பெற்றோர்கள், மாணவர்களின் முயற்சி, உயர்ச்சி, வளர்ச்சி பற்றியும் பல பேச்சாளர்கள் சுட்டிக்காட்டி வாழ்த்துரை வழங்கினர்.தொடர்ந்து அன்றையதினம் நடுவர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு பாராட்டு வாழ்த்து மடல் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள்.

இப்பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள் அறிவிப்பாளர்களாகவும், பழைய மாணவர்களில் சிலர் துணை நடுவர்களாகவும் கடமையாற்றியிருந்தனர். இதைப் பார்க்கும்பொழது தாய்மொழியாம் தமிழை அடுத்த தலைமுறையினரும் எடுத்துச் செல்வார்கள் என்பதில் ஐயமே இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

சென்ற கல்வியாண்டு வகுப்பு பரீட்சையில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்களும், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்களும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். பெற்றோரின் ஒன்றுபட்ட நீண்டகாலப் பங்களிப்பு, முயற்சியால்தான் இப்பாடசாலை யேர்மனியிலேயே தலைசிறந்த பாடசாலையாக விளங்குகின்றது எனப் பலரும் புகழாரம் செய்தனர். இந்தப் பாடசாலையின் மாணவர்கள் தாய்மொழியான தமிழடன் ஆங்கிலம், டொச், போன்ற பல மொழிகளைக் கற்று முன்னேறிவருகிறார்கள் என்றால் இப்பாடசாலை நிர்வாகங்களும் சிறப்புடன் பணியாற்றிவருவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலும் விழா சிறப்புற அன்றையதினம் முழநாளும் சிற்றுண்டி, மதியபோசனம், குடிபானங்கள் அத்தனையும் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்மை அனைத்துத்தரப்பினராலும் பாராட்டப்பட்டனர். மேலாக இப்பாடசாலையில் எதுவித சம்பளமும் பெறாமல் இலவசமாக கல்விச் செல்வத்தை வழங்கிவரும் ஆசிரியப் பெருந்தகைகளைப் பாராட்டி வாழ்த்துவது நமது கடமையாகும். நன்றியுரையுடன் விழா மாலை 8 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

- திருமதி சாந்தினி துரையரங்கன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிதரும் எதிர்காலத்திற்கு கணினிக் கல்வி!!!

மெய்ப் பொருள் காண்பது அறிவு!

கணினிக் கல்வி இதழ் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம்!...

கல்வி அறிவு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. கல்வி அறிவு அற்ற ஒரு சமூகம் உலகில் வாழமாக இருந்தால் அந்த சமூதாயம் எப்படி வளர்ச்சி அடைய முடியும். ஒரு இனத்தின் கல்வி அறிவின் அடிப்படையில்தான் அந்த இனம் வளமான இனமாகக் கருதப்படும். அந்த வகையில் தாயகத்தில் நடைபெற்ற General Certificate of Education (GCE) qualification exam க.பொ.த உயர்தரப் க.பொ.த (உ/த) பரீட்டையில் மிகவும் வியக்கத்தக்க முறையில் சித்தியடைந்து சாதனை படைத்து வரலாற்றில் மாபொரும் புரட்சியைக் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த வளர்சியானது கடந்த 10 ஆண்டுகளின் வளர்ச்சி நிலையோடு ஒப்பீடு செய்து பார்க்கும்போது பாராட்டத்தக்க ஒன்றாகும். இந்த இளைய தலைமுறையினர்களைக் கணினிக் கல்வி இதழ் வாழ்த்திப் பாராட்டுகின்றது. இந்தக்கணனி இதழைப் படிக்கவேண்டுமா... கணனி இதழ் ஆசிரியர்

திருச்செல்வம் அலெக்ஸ் லம்பேட் - Frankfurt
Triruchelvam Alex Lambert
Email alxlambrtt@aol.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கமும் தூக்கமும்....

-கவிமீனா-

மனசிலே ஏற்படுகிற சலனங்கள் கவலைகள்தான் பெரும்பாலும் தூக்கத்தைக் கெடுக்கிறது, அது என்ன துன்பம் என்று உணர்ந்து அதை நிவர்த்தி செய்து விட்டால் மன அமைதி அடையும் போது தூக்கம் தானாக வந்துவிடும். காலிலே முள்ளுக் குத்தினால் அந்த முள் உள்ளே இருந்து வலிக்கும் அதை எடுத்து எறிந்தால்த்தான் கால் வலி குறையும், அதுபோலே மனசிலே குத்துகிற முள்ளை நாம் தூக்கி அப்பாலே எறியவேணும்.

மனசிலே நின்மதி கிடைக்கத்தான் இறைவணக்கம், தியானம் என்பவற்றைக் கடைபிடிக்க வேண்டும் தூங்கும் முன்னரும் தூங்கி எழந்த பின்னரும் காலை மாலை என இரண்டு நேரமும் எமக்கு அமைதி தரும் தியானமும் இறைவழிபாடும் அவசியமாகும். நாம் தப்புகள் செய்யாமல் நேர்மையான வாழ்க்கை முறையைக் கடைபிடிக்க வேண்டும் நல்லவர்கள் சிறு தவறு செய்துவிட்டால்கூட அவர்களது மனச்சாட்சி உறுத்திக்கொண்டே இருக்கும்,தூங்கவிடாமல், எங்கள் மனமே எங்களைத் துன்புறுத்தும் அதனாலே நாம் தவறுகள் செய்யாமல் வாழ்வதே மேல்.

உடலிலே சக்கரைநோய், இரத்த அழத்தம் போன்ற நோய்கள் உள்ளவர்கள் அதற்கான மருந்துகளைக் குழித்து,உணவையும் குறைத்து, நடக்க முடிந்தால் நடந்து உடற்களைப்பு உண்டாகும்போதும் நல்லதூக்கம் வரும். அத்துடன் இரவு தூங்கப்போகும்முன் ஒருகப்பால் குடித்தால் தூக்கம் தானாகவரும் சிறுகுழந்தைகளும் வயிறு முட்டபால் குடித்தால்தானே அழாமல் தூங்குகின்றன. பாலுக்குத் தூக்கத்தை தரவல்ல தன்மை உள்ளது கடவுள் அதற்காகத்தானே பாலை சீவராசிகளுக்காக உலகில் தந்துள்ளார் பசியாறவும் பசிஆறியபின் தூங்கவும் வைக்கக்கூடிய திறன் பாலுக்கே உண்டு!

உடல் களைக்கும் போதும், மனம் அமைதிபடும் போதும் தான் தூக்கம் நன்றாக வருகிறது இதைவிட ஆழ்ந்த தூக்கம் எமக்கு ஆயுள் முடியும்போது நின்மதியான நிரந்தரமான தூக்கம் வருகிறது, அந்தத் தூக்கம் எல்லாருக்கும் ஒருநாள் உண்டு என்பதே உண்மை!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் மாரிமுத்து தியாகேஸ்வரன்
(Bochum – Germany)

பன்முகக் கலைஞனின் இழப்பு தமிழுலகத்திற்குப் பேரிழப்பே!..

யேர்மனியில் நீண்டகாலம் தமிழ், எழுத்து, கலைப்பணி, பொதுப்பணி என ஆற்றிவந்தவரும் நான்கு பிள்ளைகளின் தந்தையும் அருந்ததி அவர்களின் அன்பு மனைவியும் யாழ் அளவெட்டியில் பிறந்தவருமான திரு மாரிமுத்து தியாகேஸ்வரன் காலமாகி ஒரு மாதங்கள் ஓடிவிட்ட நிலையில் அவரின் தமிழ்ப்பணிகளை இவ்வுலகத்திற்கு எடுத்துக்காட்டி புலம்பெயர் தமிழர் வரலாறாகப் பதியப்பட வேண்டும் என்னும் ஆதங்கத்துடன் இப்பதிவை இடுகின்றேன்.

தமிழுக்கு அரும்பணியாற்றிய இவரின் மறைவு பற்றி புலம்பெயர் நாடுகளில் உள்ள சமூக ஊடகங்கள் எதுவுமே கண்டுகொள்ளவோ அவர்பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களை வெளிக்கொண்டு வராமை வேதனைதரும் விடையமாகும். தொடரும் காலங்களிலும் இப்படியாக அரும்பணியாற்றும் உத்தமர்கள் மறையும் போது அவர்கள் ஆற்றிய பணிகளைத் தமிழுலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று தமிழ் ஊடகங்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுக்கின்றேன். தொடர்ந்து இவர்பற்றிய குறிப்புக்களை நோக்குவோம்!...

வாழ்க்கைவரலாறு...

திரு தியாகேஸ்வரன் அவர்களை கலைத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒரு நடிகராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாசிரியராக, இயக்குனராக, ஓவியராக, ஒப்பனைக் கலைஞராக, பாடகராக, கவிஞராக, எழத்தாளராக அறிவிப்பாளராக இப்படிப் பலதுறைகளில் முத்திரைபதித்தவர்.

1946ஆம் ஆண்டு September 16ஆம் திகதி மாரிமுத்து , மகேஸ்வரி தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாக அளவெட்டியில் பிறந்தார். திரு தியாகேஸ்வரனை தொடர்ந்து தங்கேஸ்வரன், சிறிதரன் மற்றும் பாஸ்கரன் என்ற மூன்று ஆண்பிள்ளைகள் பிறந்தார்கள். தங்கை இல்லை என்று ஏங்கித் தவித்தவேளை முதலாவது பெண் குழந்தையாக சுகுணா பிறந்தார். அடுத்த சகோதரியான வனிதா பிறந்தது அவருக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் ஆறுபிள்ளைகளையும் இவரது தாயார் அதீத பாசத்துடனும் அரவணைப்புடனும் வளர்த்து வந்தார். துரதிஷ்டவசமாக இளவயதிலேயே தாயார் காலமானர். பள்ளி ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றிய இவரது தந்தை சிறுவயதிலேயே தாயை இழந்த பிள்ளைகளை தனது சகோதரியின் ஆதரவுடன் மிகப்பாசமாகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்த்து வந்தார்.

தனது ஆரம்ப கல்வியை அளவெட்டி ஞானோதயா வித்யாசாலையிலும் ,கலாவேவ முஸ்லீம் பாடசாலையிலும் கற்று , உயர்கல்வியை தெல்லிப்பளை மஹாஜனாக்கல்லூரியிலும் பெற்றார் . படிப்புமட்டுமின்றி ஓவியக்கலை ,மற்றும் நாடகக்கலையிலும் சிறந்து விளங்கினார் . அளவையூர் யாழ் மத்தியகல்லூரி ஆசிரியர் திரு செல்லையா சிவப்பிரகாசம் அவர்களிடம் முறையாக ஓவியம்கற்றார். திரு தியாகேஸ்வரன் அவர்கள் பலவருடங்கள் வரைவாளராக கடமையாற்றினார். கொழும்பு துயநடய ருழைெ ஊயசடிவைந நிறுவனம், மூதூர் நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையிலும் கடமையாற்றினார்.

திரு தியாகேஸ்வரன் அவர்கள் 1976 ஆம் ஆண்டு உரும்பராயைச் சேர்ந்த அருந்ததியை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். அன்றிலிருந்து 43 வருடங்களாக அவர்கள் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் அன்பின் அடையாளமாக இவர்களுக்கு பிரபா, ரேகா, ஜனகன், பிரதீப் என 4 செல்வங்கள். தன்னுடைய பிள்ளைகள் தங்களுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணைகளான பரணீதரன், மதன், அகல்யா மற்றும் லீஸாவை மணமுடித்ததை எண்ணிப் பெருமகிழ்ச்சியுற்றார். அவர் ஆசைக்கேற்ப ஆறு பேரன்களான அக்ஷய், ஷியாம், சூரியா, யஷ்வா, ஆதவன் மற்றும் ஆதித்யா அவர்களின் குறும்புகளையும் வளர்ச்சியையும் கண்டு ரசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நடிப்பின்மேல் இருந்த ஆர்வத்தால் பலமேடைகளில் வெவ்வேறு பாத்திரமேற்று நடித்து அனைவரது பாராட்டையும் பெற்றார். கலைத்துறை தவிர இவருக்கு விளையாட்டிலும் ஆர்வம் அதிகம். .துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் இவருக்குமிகவும் பிடித்த விளையாட்டுக்களாகும். தன் தாய் நாட்டில் மிகுந்த பற்றுக்கொண்டவர் ,தாய் மொழியை தன் உயிராய் மதித்தவர். நாட்டுப்பிரச்னை காரணமாக மிகுந்த மனவேதனையுடன் 1984 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு Germany வந்தார். ஜெர்மனியில் வாழ்ந்து வந்தாலும் அவருக்கு தமிழ் மொழியின்மேல் இருந்த பற்று குறையவில்லை. இங்கேயும் அவருடைய கலைப்பணி தொடர்ந்தது.

சரித்திர நாடகங்கள் பலவற்றை ஜேர்மனியிலும் இயக்கி, தான் நடித்துமுள்ளார். தமிழ்ச்சஞ்சிகைகள் நடாத்திய பலவிழாக்களில் இவர் பெரும் பங்கு வகித்துள்ளார். மேலும் "திருப்பம்"என்ற குறும்படத்தை எழுதி இயக்கி முக்கிய பாத்திரமேற்று நடித்து மக்களின் மனதைக் கவர்ந்தார்.இவரின் எழுத்தார்வத்தின் அடுத்த கட்டமாக யேர்மனியில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் "பூவரசு", "மண்", "சிறுவர் அழுதம்" மற்றும் "தென்றல்"போன்ற இதழ்களுக்கும் "வெற்றிமணி" "தமிழருவி" "ஈழம்" சஞ்சிகைகளுக்கும் சிறுகதைகள் எழுதி அவற்றுக்குப் பொருத்தமாக ஓவியங்களும் வரைந்துவந்தார். பூவரசு சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய "நட்பு" என்ற சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்தது .

கம்பீரமான குரல்கொண்ட இவர் எத்தனையோ மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியுள்ளார். அது மட்டுமல்ல யேர்மனியில் முதன் முதல்வெளிவந்த "கலைவிளக்கு" வீடியோ சஞ்சிகைக்கும் பல வருடங்கள் அறிவிப்பாளராக கடமையாற்றியுள்ளார். மேலும், மஹாஜனக் கல்லூரியின் பழையமாணவர்சங்கத்தின் ஜேர்மன் கிளைத்தலைவராகவும் பொறுப்பேற்று, மஹாஜனாவின் வளர்ச்சிக்கு தன்னாலியன்ற பணிகளைப் புரிந்துவந்தார்.

சில வருடங்களாக இவருடைய உடல்நலம் பாதிக்கப்பட்டு எத்தனையோ இன்னல்களை இவர் சந்தித்திருந்தாலும் இவருடைய மனவலிமை காரணமாக இத்தனை வருடங்கள் தனது மனைவி மக்கள் பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்த இவர், மனைவி மக்கள் பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்ந்து 2020 தை மாதம் 30ஆம் திகதி எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி, இவ்வுலகைவிட்டு இறைவனடிசேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சஞ்சிகையோடு இவர்....

யேர்மனியில் முதன்முதல் சிறுவர்களுக்காக வெளிவந்த சிறுவர் சஞ்சிகையான "சிறுவர் அமுதம்" சஞ்சிகையின் ஆசிரியரும் எனது நண்பருமான அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்கள் 1990ம் ஆண்டு சஞ்சிகை ஆரம்பித்தபோது அமரர் தியாகேஸ்வரன் அவர்கள் என்னோடு அறிமுகமாகினார். அன்றுதொட்டு இற்றைவரை சுமார் முப்பது ஆண்டுகளாக என்னோடு இனிய நண்பராக வாழ்ந்து வந்திருக்கிறார். அமைதியானவர் பேசுவதற்கு இனிமையானவர். பல்கலைகள் தெரிந்தவர். தமிழ்மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். எல்லோருக்கும் எல்லாத் திறமைகளும் ஒருங்கே சேராது. ஆனால் இவரிடம் எல்லாக் கலைகளும் அதாவது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் ஒருங்கே அமைந்திருந்தமையைக்கண்டு நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்.

தன்னோடு மட்டுமே கலையார்வம் நின்றுவிடக்கூடாது ,தன்னுடைய பிள்ளைகளும் அதைத்தொடரவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார் . தன்னுடைய குழந்தைகளையும் எல்லாவற்றிலும் பங்கு பெறவைத்து மிகவும் ஊக்கமளித்தார். மண் சஞ்சிகை பல ஆண்டுகளாக நடாத்திய ஆண்டுவிழாப் போட்டிகளான பேச்சுப்போட்டி ஓவியப்போட்டிகளில் பிள்ளைகளைப் பங்குபெறச் செய்து பல பரிசுகளையும் வெல்லவைத்தார். தம் பிள்ளைகளை ஈடுபடுத்தி சமூக நாடகம் ஒன்றையும் மண் சஞ்சிகைவிழாவில் மேடை ஏற்றி மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கிறார். இவை மட்டுமல்லாமல் தமது இரு பிள்ளைகளையும் முறைப்படி பரதம் பழக வைத்து அரங்கேற்றம் கண்ட பெருமையையும் சேர்த்துக்கொண்டார்.

இவர் அமரத்துவம் அடைந்து 31வது நாள் நினைவு தினத்துக்கு நானும் சென்றிருந்தேன். அங்கு இவரின் பேரப்பிள்ளைகள் மூன்றுபேர் ஆறு ஏழ வயதுதான் இருக்கும் அவர்கள் தேவாரம்பாடி சபையோரின் பாராட்டையும் பெற்றமை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். இதிலிருந்து இவரின் தமிழ்ப்பற்றைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.தமிழினத்துக்கும் மொழிக்கும் பங்காற்றிய இந்தத் தவப்புதல்வனை, வல்லவனை அடையாளப்படுத்த வேண்டியதும், அவரை தமிழ் உலக வரலாற்றில் பதியப்பட வேண்டியதும் எம்போன்ற ஊடகவியலாளர்களின் கடமையாக எண்ணுகிறேன். தமிழலகம் அறியட்டும் அவர் பணிகளை மெச்சட்டும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்போமாக!...

-ஆசிரியர் மண்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெஜினாவின் பெயருக்கு 50.000-00 ரூபா

யாழ் சுழிபுரம் காட்டுப்புலம் தமிழ்க்கலவன் வித்தியாலய முதலாம் வகுப்பு மாணவி செல்வி சிவனேஸ்வரன் ரெஜினா (6வயது) கடந்த இரண்டு வருடங்களின் முன் தமிழ்க் காமுகர்களாலேயே சின்னாபின்னமாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டது அனைவருக்கும் தெரிந்த விடையமாகும். இந்த மழலைச் செல்வத்தை இழந்து துடிக்கும் குடும்பத்தவர்களின் வறுமையையும் பரிதாபத்தையும் போக்கும் நோக்கில் எமது அமைப்பால் 50.000-00 ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இவரின் பெற்றோரான திரு திருமதி சிவனேஸ்வரன் குடும்பத்தினருக்கு யாழ்-சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில் பாடசாலையின் அதிபர் திரு ம முகுந்தன் தலைமையில் யேர்மனி பிறேமன் நகரில் அலுவலமாகக்கொண்டு இலங்கிவரும் சங்கானை பசுமைவளத்திட்டத்தின் தலைமை நிர்வாகி திரு சோம சிவ குலநாயகம் அவர்களின் சார்பில் சங்கானைப் பிரதிநிதி திரு செ கருணாமூர்த்தி ஐம்பதாயிரம் ரூபாவை (50.000-00) வழங்கினார்.அன்றையதினம் விழாவில் கலந்துகொண்ட ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும் ஒவ்வொரு மாங்கன்றும் ஒவ்வொரு பழக்கன்றும் கொடுக்கப்பட்டு றெஜினாவின் பெயரில் ஒவ்வொரு குடும்பத்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வீடுகளில் அவரின் ஞாபகார்த்தமாக நாட்டும்படி பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது. அத்தோடு செல்வி றெஜினா படித்த பாடசாலையிலும் அவர் நினைவாக மாங்கன்று ஒன்று நாட்டப்பட்டது.

விழாவைச் சிறப்பிக்க வழமைபோல அண்டையிலுள்ள மூன்று முன்பள்ளிச் சிறுவர்களும் அழைக்கப்பட்டு சிற்றுண்டிகள், இனிப்பு சொக்லேட் வகைகள், குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு முன்பள்ளிச் சிறார்கள் அனைவருக்கும் கொப்பிகள் பென்சில்கள் பாடசாலை உபகரணங்கள் வழங்கி அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. கலந்துகொண்ட பெற்றோருக்கும் பயன்தரும் பழமரக்கன்றுகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த மரங்கன்றுகள் வழங்குவதுடன் பாடசாலையின் அபிவிருத்திக்குக் கடந்த 2017ம் ஆண்டு தொடக்கம் 13 வருடங்களாகத் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வு நடைபெற்றுவருகின்றது. இந்த விழாவிற்கு யேர்மனியிலுள்ள சங்கானை பசுமைவளத்திட்ட அமைப்பினர் நிதி உதவிகளைச் செய்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

ஆகவே இதுபோன்ற நடவடிக்கைகளில் புலம்பெயர்வாழ் தமிழ்மக்கள் ஈடுபட வேண்டும் என்பது எமது அன்பான வேண்டுகோளாகும். இன்றைய சூழலில் உலகம் மாசுபடும் வேகம் அதிகரித்து வருவதால் நாம் எங்கும் மரக்கன்றுகளை நட்டு வளர்த்து எமைப்படைத்த பூமியைக்காப்பாற்ற வேண்டியது எமது தலையாய கடமையாகும். எனவே பணம் பொருளுடன் பயன்தரும் பழக்கன்றுகளையும் அன்பளிப்பாக வழங்கலாம். விரும்புபவர்கள் எங்கள் அமைப்பின் ஊடாகவும் உதவிகளைச் செய்யலாம். மேலதிக தொடர்புகளுக்கு எம்மோடு தொடர்புகொள்ளலாம்.

-நன்றி-

சோம சிவ குலநாயகம்
சங்கானை பசுமைவளத் திட்டம்
பிறேமன் - யேர்மனி
தொலைபேசி - 49 421 531024
மின்னஞ்சல் yarlpuraa@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களை வெட்டி கொன்ற சுனில் விடுதலை

யாழவன் March 26, 2020 சிறப்புப் பதிவுகள், யாழ்ப்பாணம் தென்மராட்சி - மிருசுவில் பகுதியில் 2000ம் ஆண்டு தமிழர்கள் எட்டுப் பேரை வெட்டிப் படுகொலை செய்த வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ முன்னாள் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.அண்மையில் சுனில் ரத்னாயக்க பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டார் என்று பலமுறை செய்திகள் வெளியாகியிருந்தது.இந்நிலையில் இப்போது பொது மன்னிப்பு உறுதி செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

2000 டிசம்பர் 19 அன்று மிருசுவிலில் தமது வீடுகளை பார்வையிட சென்றவர்களில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் இராணுவத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.இதன்போது தப்பியோடி வந்த ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் 14 இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டனர்.இதில் இராணுவச் சிப்பாய்கள் ஐவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.2015 யூன் 25 அன்று மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு வழங்கிய தீர்ப்பில், சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஏனைய நான்கு சிப்பாய்களும் போதிய ஆதாரமில்லை என்று தெரிவித்து விடுதலை செய்யப்பட்டனர். -Tamil Diaspora News-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி தூக்கிலிடப்பட்ட நாட்டில் கொலையாளிகள் சிறையில் இருப்பதில்லை- காணாமல் ஆக்கப்பட்டாரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மிருசுவில் படுகொலை தொடர்பான தண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய்க்கு ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பாக அவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கூறுகையில், தமிழர்கள் இலங்கையிலிருந்து பொறுப்புணர்வையும் நீதியையும் நம்பக் கூடாது. நாட்டின் உள்நாட்டுப் போரின்போது எட்டு பொதுமக்களைக் கொன்றதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு சிப்பாயை இலங்கை ஜனாதிபதி விடுவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகப் பிரிந்துபோவது தான் ஒரே தீர்வு. தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்றியதன் விளைவுதான் இது. கொன்றவனையே நீதிபதி ஆக்கும் உள்ளக விசாரணை வேண்டாம். கோழிகளுக்கு ஓநாய் பாதுகாவலன் என்று நம்புவதற்கு தமிழ் மக்கள் இனியும் தயாரில்லை. தமிழ் இனப் படுகொலையாளிகளிடம் இருந்து தமிழ் மக்களுக்கு பாதுகாப்புக் கேட்க ஐ.நா.விடம் சர்வசன வாக்கெடுப்பைக் கோரவேண்டும். சிறிலங்காவின் நீதித்துறை சுயாதீனமாக இயங்கவில்லை. அதற்குள் ஆட்சியாளர்களினதும் இராணுவத்தினரதும் தலையீடுகள் உண்டு. நாடு இராணுவ மயமாக்கலை நோக்கிப் போகிறது. தமிழ் மக்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஒற்றையாட்சிக்குள் சேர்ந்து வாழ முடியாது என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகுநாதன் என்னும் இலட்சிய நடிகர்... தெய்வம் தந்த கலைஞன் மறைந்தார்!...

(வண்ணைத்தெய்வம் -பிரான்ஸ்)

பிரான்சில் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு உள்ளாகி ஈழத்தமிழ் கலைத்தாயின் மூத்தமகன் ஏ.இரகுநாதன் தனது 85 வது வயதில் உயிரிழந்துள்ளார்.கடந்த சில நாட்களுக்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் (22-04-2020) உயிர்பிரிந்தார் என்ற செய்தி உலகம் வாழ் தமிழர்களுக்குப் பெரும் சோகத்தைப் பதிவாக்கியுள்ளது.

வாழும்போதே தமிழுக்குப் பணிசெய்தவர்கள் போற்றிப்பாராட்டவேண்டும் என்ற எமது சஞ்சிகையின் நல்நோக்கில் அவர் வாழ்ந்தபோழுதுகளில் எமது மண் சஞ்சிகை 2017 வைகாசி-ஆனி 183வது இதழில் அட்டைப்படத்தில் பிரசுரித்து அவரை கௌரவப்படுத்தியதுடன் அவரை மகிழ்வுற வைத்தது. இவர் பற்றி பிரான்ஸ் மூத்த எழுத்தாளர் திரு வண்ணைத் தெய்வம் அவர்கள் எழுதிய கட்டுரை (2017 வைகாசி-ஆனி இதழ்-183) அப்படியே மீள்பிரசுரமாகியுள்ளது.

காலத்தின் ஓட்டத்தில் நாகரீகத்தின் வளர்ச்சியில் பண்பாட்டின் மலர்ச்சியில்மலர்ந்ததுதான் கலை! அந்தக் கலைக்குள்த்தான் எத்தனை பிரிவுகள்?! எங்கள் ரகுநாதன் அவர்கள் அந்தக் கலைக்குள் உள்ள பல பிரிவுகளை தன்னகத்தே கொண்டவர். எழுத்து, நடிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்கம்,நாட்டுக்கூத்து, அரச நாடகம், சமூக நாடகம், சினிமா, குறும்படம், இப்படியாக அகவை எண்பதைத் தாண்டிய பின்னரும் கலைத்தாகம் தணியாத ஒரு மனிதராகவே வாழ்ந்து வருகின்றார்.

"கலையரசு" சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் வாரிசான இவர் மலேசியாவில் பிறந்தவர். பூர்வீகம் யாழ்ப்பாணம் மானிப்பாய். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் கல்லூரி நாடகங்களில் நடிக்கத்தொடங்கியபோது ஏற்பட்ட கலை ஆர்வம் இன்று கலைக்காக தன்னையே அர்ப்பணிக்கும் அளவிற்கு தனது வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

கலையரசு' ஐயா அவர்களின் இயக்கத்தில் தன்னை வளப்படுத்திக்கொண்ட இவர். பின்னர் கலைத்துறையினரால் "சானா" என அழைக்கப்பட்ட சண்முகநாதன், ரொசோரியோ பீரிஸ், சுஹைர் கமீட், "நடிகவேள்" லடீஸ் வீரமணி, ஆகிய பிரபல இயக்குனர்களின் இயக்கங்களில் எல்லாம் நடித்திருக்கின்றார். இவர் நடித்த தேரோட்டி மகன், வேதாளம் சொன்ன கதை, ரகுபதி ராகவ ராஜாராம், பச்சைக்கிளியே பழம் கொண்டா, வாடகை அறை, நகரத்துக் கோமாளிகள், அவளைக் கொன்றவள் நீ, போன்ற நாடகங்கள் மிகவும் புகழ்பெற்றவை. நாடகத்துறை வளரவேண்டும். நல்ல நாடகங்களை மேடையேற்றவேண்டும். என்ற பேரார்வத்தினால் தனது 'நிழல்' நாடகமன்றத்தின் மூலமாக 1968ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தொடர்ந்து ஏழ நாட்களும் யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் ஐந்து நாட்களும் "நிழல் நாடக விழா"வினை நடாத்தி சாதனை படைத்தவர். நாடக வளர்ச்சிக்காகவே "நிழல்" என்ற பத்திரிகையையும் நடாத்தியுள்ளார்.

ஈழத்திருநாட்டில் சிங்களத் திரைப்படங்கள் சர்வதேச தரத்தை எட்டிப்பிடிந்திருந்த போதும் தமிழ்ப் படங்கள் தமிழ்நாட்டில் இருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குமதியாகிக் கொண்டிருந்த காலத்தில் ஈழத்து தமிழ்க்கலைஞர்களால் உருவாக்கப்பட்ட "தோட்டக்காரி" என்ற திரைப்படம் அரங்குகளுக்கு வந்தது. ஆனால் ரசிகர்களுக்கு நம்பிக்கையைத் தரவில்லை. அடுத்து வந்தது "கடமையின் எல்லை" அந்தப் படத்தில் எங்கள் ரகுநாதன் அவர்களும் நடித்திருந்தார். இது ஓரளவுதான் நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஈழத் தமிழர்களாலும் தரமான திரைப்படங்களைத் தயாரிக்க முடியும் என்னும் கலை வெறியோடு தனது சொத்துக்களை விற்று ரகுநாதன் அவர்கள் உருவாக்கிய திரைப்படம்தான். 'நிர்மலா". இந்தத் திரைப்படம் ரசிகர்களுக்கு நம்பிக்கையைத் தந்து பெரு வெற்றியைத் தந்தது.

'நிர்மலா" திரைப்படத்தின் தயாரிப்பாளராக இருந்தபோதும் தனக்காக கதாநாயகன் பாத்திரத்தை தேர்வு செய்யாமல் ஒரு கௌரவ பாத்திரத்திலேயே நடித்திருந்த இவர் பின்னர் 'தெய்வம் தந்த வீடு" என்ற படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவராக இருந்ததுடன் அந்தப் படத்தில் ஒரு முக்கிய பாத்திரமான நாதஸ்வரக் கலைஞனாக மிகச் சிறப்பாக நடித்திருந்தார். இந்தப் படத்திற்கு உள்ள சிறப்புகள் என்னவென்றால் காலஞ்சென்ற பிரபல நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் அவர்கள் இவருக்காக பின்னணி நாதஸ்வரம் வாசித்துள்ளார். காலம் சென்ற பல்துறைக் கலைஞர் திருமிகு இணுவில் வீரமணி ஐயர் அவர்கள் பாடல்களை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தின் பிரபல இசைக் கலைஞர் திரு. கண்ணன் அவர்கள் இசையமைத்துள்ளார் அது மாத்திரமல்ல இலங்கையில் தயாரான முதல் சினிமாஸ்க்கோப் திரைப்படம் தெய்வம் தந்த வீடுதான்! அதற்குப் பின்னர்தான் சிங்களத் திரைப்படங்களே சினிமாஸ்கோப்பில் வெளிவந்தன.

'நிர்மலா" திரைப்படத்தில் 'நடிகமணி' வி.வி.வைரமுத்து அவர்களின் மயான காண்டத்தில் ஒரு சிறு பகுதியைச் சேர்த்து நடிகமணியை நடிக்கவைத்ததுபோல "தெய்வம் தந்த வீடு" படத்தில் 'நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி 'பூந்தான் யோசேப்பு அவர்களின் ஒரு நாட்டுகூத்தின் சிறு பகுதியைச் சேர்த்து அவரையும் நடிக்கவைத்ததோடு "கலையரசு" சொர்ணலிங்கம் ஐயா அவர்களையும் நடிக்கவைத்து அவர்களைக் கௌரவப் படுத்தியுள்ளார். பல சிங்களப் படங்களுக்கு திரைக்குப் பின்னால் இருந்து பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர் இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பான 'நெஞ்சுக்கு நீதி' என்ற படத்திலும் நடித்திருக்கின்றார் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் தானே ஒரு திரைப்படக் கதையை எழுதி அதில் நடிகர் சிவகுமாரையும் நடிகை லஷ்மியையும் நடிக்கவைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்! அம்முயற்சி கைகூடாமல்ப் போகவே அந்தக் கதையை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவலாக எழுதி "எனக்காகப் பூக்கும்" என்ற பெயரில் வெளியிட்டார். காலம் இவரை வெளிநாட்டிற்கு அழைக்க பாரீஸ் வந்த இந்தக கலைஞருக்கு தீனிபோட முதலில் முன்வந்தார் பிரபல அறிவிப்பாளர் எஸ்.கே. ராஜன் அவர்கள். ஆம் 1994ல் ராஜன் ஆவர்கள் தயாரிக்க ரகுநாதன் அவர்களது இயக்கத்தில் வெளியானது "இன்னும் ஒரு பெண்" என்னும் திரைப்படம். அதே ஆண்டு இலங்கை வானொலியில் 268 வாரங்கள் ஒலிபரப்பாகி பெரும் புரட்சியை ஏற்படுத்திய "முகத்தார் வீடு" நாடகத்திற்கு இவர் திரைக்கதை அமைக்க கலைஞர் இரா குணபாலன் அவர்கள் தயாரிக்க இவரது இயக்கத்தில் வெளியானது. "முகத்தார் வீடு" திரைப்படம். தொடர்ந்து "நினைவு முகம்" "மௌனம்" ஆகிய படங்களுடன் பிரான்ஸ் ஜெர்மன் கலைஞர்களின் கூட்டு முயற்சியில் உருவான 'தயவுடன் வாழவிடுங்கள்' ஆகிய படங்களையெல்லாம் இயக்கியுள்ளார்.

ரகுநாதன் அவர்களின் பால்யகால நண்பரும் "கலையரசு" ஐயாவின் நாடகப் பட்டறையில் பயின்றவரும் தற்போது லண்டனில் பாரிஸ்ட்டராக பணி புரிந்துகொண்டு கலைப்பணி ஆற்றிவருபவருமான திரு.யோசப் அவர்கள் தயாரிக்க சுவீஸில் வாழ்கின்ற திரு. அஜீவன் அவர்கள் எழுதி இயக்கிய "அழியாத கவிதை" என்னும் குறும்படத்திலும் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். அதுபோல இவருக்கு பெரும் சிறப்பையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொடுத்த மற்றுமொரு குறும்படம் திரு. பரா அவர்களின் இயக்கத்தில் உருவான "பேரன் பேத்தி" என்ற குறும்படமாகும்.

பாரிஸ் இருந்து வெளியான "ஐரோப்பிய முரசு" பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த இவர் பின்னர் திரு எஸ் கே காசிலிங்கம் அவர்கள் ஆசிரியராக இருந்த "தமிழன்" என்னும் பத்திரிகையில் 1947 முதல் தான் சந்தித்த, தன்னைப் பாதித்த எழத்தாளர்கள், நடிகர்கள், இசைக கலைஞர்கள், நடன மணிகள், நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் பற்றியெல்லாம் "ஒரு ஒப்பனை இல்லாத முகம்" என்னும் தலைப்பில் முப்பது வாரங்களுக்கு மேலாக தொடராக எழதியுள்ளார்.

இத்தனை சிறப்புகளும் தன்னகத்தே கொண்ட ரகுநாதன் அவர்களுக்கு கலைஞர்கள் பலரும் ஒன்று சேர்ந்து 2010ம் ஆண்டு பவளவிழா நடாத்திக் கௌரவித்ததோடு அந்த விழாவில் "சுட்ட பழமும் சுடாத மண்ணும்" என்னும் தலைப்பில் சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிட்டிருந்தார்கள் எண்பத்திரண்டு வயதில் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக் கலைஞன் 1947ம் ஆண்டு முதல் ஐந்து தலைமுறைக் கலைஞர்களுடன் நடித்த பெருமைக்குரியவராக திகழ்தார். இன்று அவர் இல்லை. அவர் நாமம் என்றும் உலகத்தமிழர் வரலாறு பதிவு செய்யும்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

நீர்வை பொன்னையன்!...

ஈழத்தின் பிரபல எழுத்தாளரான நீர்வை பொன்னையன் 26-03-2020 கொழும்பில் அமரராகிவிட்டார் என்ற செய்தி ஈழத்து இலக்கிய உலகைப் பெரிதும் கவலைக் குள்ளாக்கியுள்ளது. தான் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் கடைசிவரை வாழ்ந்தவர் முற்போக்கு எழுத்தாளர் நீர்வைப் பொன்னையன். இவர், 1930ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் - நீர்வேலி என்னும் விவசாயக் கிராமத்தில் உள்ள ஒல்லைக்குறிச்சி எனப்படும் இடத்தில் இராமலிங்கம் -இலட்சுமி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர், பின்னர் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா கல்லூரியில் பயின்று பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை முஸ்லிம் பாடசாலையில் பணியாற்றினார். பின்னர் இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டதாரியாகத் தாயகம் திரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சென்ற காலத்தில், வங்காளத் தொழிலாளி வர்க்கத்தின் தீவிர போராட்டங்களிலிருந்தும் கலை, இலக்கிய இயக்கத்தின் செயற்பாடுகளிலிருந்தும் இவர் பெற்ற புரட்சிகர உணர்வும் அனுபவங்களும் இவரை படைப்பிலக்கியக் களத்திற்குள் பிரவேசிக்க உந்துதலாயிருந்தன. 1957இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் பல ஆண்டுகளாக வேலைதேடி அலைந்து வேலை கிடைக்காமையால் விவசாயியாகவே வாழ்ந்தார். இவர் எழுதிய முதலாவது சிறுகதையான "பாசம்" யாழ்ப்பாணம் ஈழநாடு இதழில் 1957இல் வெளியானது. இவரது இரண்டாவது கதையான "மேடும் பள்ளமும்" கலைச்செல்வியில் வெளியானது.

1960களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து கொண்டார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி மேடும் பள்ளமும் 1961இல் வெளியானது. காலக்கிரமத்தில் "உதயம்" "பாதை", "வேட்கை" "நிமிர்வு" "ஜென்மம்", "காலவெள்ளம்", "நினைவுகள் அழிவதில்லை", "நீர்வை பொன்னையன் கதைகள்" ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளியாகின. இவரது "Devils and Demons" சிறுகதை ஆங்கில மொழிபெயர்ப்பாகவும் "Lengathugama" சிறுகதை சிங்கள மொழிபெயர்ப்பாகவும் வெளிவந்துள்ளன. நீர்வை பொன்னையன் "நீர்வை", "ஞானி" ஆகிய புனைபெயர்களில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதியதோடு பிறநாட்டு இலக்கிய மொழிபெயர்ப்புகளும் செய்துள்ளார்.

"தேசாபிமானி", "தொழிலாளி" ஆகிய அரசியல் வாரப் பத்திரிகைகளின் ஆசிரிய குழுவில் பணியாற்றி ஆக்க பூர்வமான கட்டுரைகளை எழுதியுள்ளார். 1969ஆம் ஆண்டிலிருந்து 1983வரை அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1996இல் இருந்து விபவி மாற்றுக் கலாசார மையத்தில் தமிழ்ப்பிரிவின் இணைப்பாளராகச் செயற்பட்டு ஆக்கஇலக்கியம் மற்றும் கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் பங்களிப்பைச் செய்துள்ளார். சிறுகதைத்துறைக்கு அப்பால் நாட்டரியலிலும் பங்களிப்புச் செய்துள்ளார். உலகத்து நாட்டார் கதைகள் என்ற இவரது நூலில் 250 நாட்டார் கதைகள் அடங்கியுள்ளன.

இவரது ஏனைய நூல்களாகமுற் போக்கு இலக்கியமுன்னோடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2002), நாம் ஏன் எழுதுகின்றோம்? (2004) நினைவலைகள் என்பன வெளியாகியுள்ளன. இவர் இலங்கை முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்கள் என்ற நூலின் தொகுப்பாசிரியருமாவார். இவர் முற்போக்கு எழுத்தாளரான சமீமுடன் இணைந்து முற்போக்கு இலக்கியப் பேரவையை உருவாக்கினார். இந்த அமைப்பின் மூலம் பல நூல்களை வெளியிட்டார்.

இவரது பணிகளைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பு பல்கலைக்கழகம் 1998 இலும் பேராதனைப் பல்கலைக்கழகம் 2009இலும் இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவித்தன. கொழும்பு "ஞானம்" சஞ்சிகை தனது 62ஆவது இதழில் (ஜூலை 2005) இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது. இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் உயரிய தேசிய விருதான சாஹித்ய ரத்னா விருது இவருக்கு 2017இல் வழங்கப்பட்டது.

இவரின் இழப்பு தமிழ்க்கலை இலக்கிய உலகிற்குப் பேரிழப்பாகவே கருதப்பட்டுள்ளது. அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துவோம்.

மன்னாரில் முஸ்லிம்களை திருமணம் செய்த 2,026 தமிழ் பெண்கள்.....

மன்னார் மாவட்டத்தில் 2,026 தமிழ் பெண்கள் முஸ்லிம் இளைஞர்களை திருமணம் செய்துள்ளதுடன் , 12 தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் பெண்களை திருமணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2019 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட செயலக புள்ளி விபரங்களின்படி இந்த விபரங்கள் வெளியாகியுள்ளன. மன்னார் மாவட்டத்தில் 71,868 முஸ்லிம்கள் வாழ்கின்றதுடன் அவர்களில் 34, 494 பேர் ஆண்களும் 37,374பேர் பெண்களும் அடங்குகின்றனர். 71,868 முஸ்லிம்களில், 69,854 பேரே முஸ்லிம்கள். மற்றவர்கள் முஸ்லிம் ஆண்களை திருமணம் செய்துள்ள தமிழ் பெண்கள் ஆவர்கள் எனவும் அந்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தகவல்:- Tamil Diaspora News

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியூபாவும் கொரோனாவும்...இன்றைய உலகின் ஹீரோ...!

கியூபாவில் பெரும் இயற்கைப் பேரிடர் வந்து மக்கள் கொத்து, கொத்தாக இறந்த நேரம்! 'உலக நாடுகளே! எங்கள் மக்களின் சாவைத் தடுத்து நிறுத்துங்கள்! மாத்திரை, மருந்துகள் தாருங்கள் உங்கள் மருத்துவர்களை அனுப்பி உதவி செய்யுங்கள்', எனப் பிடல் காஸ்ட்ரோ கெஞ்சினார்! அமெரிக்காவுக்குப் பயந்து எந்த நாடுகளும் உதவி செய்யவில்லை. பெரும் இழப்பிற்குப் பிறகு பிடல் காஸ்ட்ரோ ஒரு முடிவுக்கு வந்தார். மருத்துவக் கல்லூரிகள் ஏராளம் தொடங்கப்பட்டன. அதுவும் இலவசம் என்கிற நிலைக்கு வந்தன!

அமெரிக்காவில் சுமார் 420 பேருக்கு ஒரு மருத்துவர், ஐரோப்பாவில் 330 பேருக்கு ஒரு மருத்துவர் என்கிற நிலையில், கியூபாவில் 150 பேருக்கு ஒரு மருத்துவர் என்கிற சாதனையைப் பிடல் உருவாக்கினார். உலகத்திலே தரமான மருத்துவம் என்கிற பெயரும் பெற்றது. அமெரிக்க மருத்துவ மாணவர்கள் கியூபா நாட்டிற்கு அதிகமாய் மருத்துவச் சுற்றுலா செல்ல தொடங்கினார்கள். இவ்வளவு மருத்துவப் புரட்சியைச் செய்த பிடல் காஸ்ட்ரோ உலக நாடுகளுக்கு ஓர் அறிவிப்பு செய்தார்!

உலக நாடுகளே!உங்கள் நாட்டில் பிரச்சினை என்றால் நாங்கள் மருந்து, மாத்திரைகள் அனுப்புகிறோம் எங்கள் மருத்துவர்களும் இலவசமாக வந்து பணிபுரிவார்கள்', என்று அறிவித்தார். அவ்வகையில் 95 நாடுகளுக்கு இதுவரை 2 இலட்சம் மருத்துவர்களைக் கியூபா அனுப்பியுள்ளது. இன்றைக்கு ''கொரோனா'' வந்த மனிதரை எப்படித் தனிமைப்படுத்தி வைக்கிறார்களோ, அப்படி 60 ஆண்டுகளாக இந்தக் கியூபாவை அமெரிக்கா தனிமைப் படுத்தி வைத்தி இருக்கிறது!

அவ்வளவு மன உளைச்சலையும் வெற்றிக்கு உரமாக்கி உயர்ந்த நாடு இந்தக் கியூபா! இதோ! பிரிட்டன் போன்ற நாடுகள் எவ்வளவோ கெடுதல் செய்தாலும், அந்த மக்களையும் காப்பாற்ற கியூபா தான் முன்வந்துள்ளது! எல்லா நாடும், தனது நாட்டு எல்லையை மூடிச் சொந்த நாட்டு மக்களைக் கூட உள்ளே விடமாட்டேன் என்று சொல்லுறான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், கொரோனா பாதித்த சுமார் 600 பிரிட்டீஷ் பயணிகளை ஏற்றி வந்த கப்பலை, அனைத்து நாடுகளும் திருப்பி அனுப்பிய போது.... கியூபா தனது துறைமுகத்தில் அனுமதித்து... தஞ்சம் கொடுத்துள்ளது...மருத்துவம் வழங்கி அவர்களை குணப்படுத்த முன்வந்துள்ளது... கியூபா என்னும் சின்னஞ்சிறு நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் உட்பட ராஜீய ரீதியான தடைகள் அனைத்தையும் ஏவி, மற்ற நாடுகளையும் அதற்காக நிற்பந்தித்து வரும்...உலகின் பொருளாதாரப் புலிகள் எல்லாம்... தெறிச்சு ஓடும் போது...இந்த நோயைக் கண்டு பதறாமல் நின்று எதிர்கொள்ளும் கியூபா தான் இன்றைய உலகின் ஹீரோ...!

உலகில் நுண் கிருமிகளின் (வைரஸ்) தாக்கம்...

உலகை உருட்டிப்பிரட்டிப் பல்லாயிரம் மக்களைப் பலிகொண்டுவரும் இந்த நுண் கிருமிகளின் தாக்கத்தால் கடந்த காலங்களில் பலியானோரின் எண்ணிக்கையைப் பார்ப்போம்...

-2019 - 2020-கோவிட்-19 வைரஸ் (Covid) - ???????????(3லட்சம்அதிகம்)
-2014 -எபொலா வைரஸ் (Ebola) - 11.233 பலி
-2012 -மெர்ஸ் வைரஸ் (Mers) - 858 "
-2009 - 2019-பன்றிக்காய்ச்சல் (Swine Flu) - 2.00.000 " (2லட்சம்)
-2002 -சார் வைரஸ் (Sars) - 774 "
-1981 -எயிட்ஸ் (HIV/Aids) - 1.00.00.000 " (1கோடி)
-1968 - 1970-ஹொங்ஹொங் புளு (Hong Hong Flu) - 10.00.000 " (10லட்சம்)
-1957 - 1958-ஆசிய புளு (Asia Flu) - 11.00.000 " (11லட்சம்)
-1918 - 1919-ஸ்பெயின் புளு (Spanish Flu) -5.00.00.000 " (5கோடி)
-1899 - 1913-பிளைக் வைரஸ் - 1.50.000 "
-1889 - 1890-ரஷ்ஷியா புளு - 1.50.000 "
-1855 - 1959-மூன்றாம் பிளெக் வைரஸ் - 1.20.00.000 (1கோடி20லட்சம்) (இந்தியாவில் மட்டும் 1 கோடி பேர்)
-1665 - -பிளெக் வைரஸ் - 5.60.00.000(5கோடி60லட்சம்)
-1350 - -யூபானிக் பிளெக் வைரஸ் -20.00.00.000 (20கோடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Corona.....சாதக, பாதக விளைவுகள்....

"கொறோனா-19" என்னும் நுண்கிருமியானது உலகமெல்லாம் பரவி இன்று பல லட்சம் உயிர்களைப் பலகொண்டுவருக்கின்றது. இப்படியான வைரஸ் கிருமிகளால் கடந்த நூற்றாண்டு தொடக்கம் இற்றைவரை பலகோடி மக்கள் மடிந்த துயரச் செய்திகளையும் நாம் அறிந்திருக்கின்றோம். மனிதர்கள்தான் எத்தனையோ அநீதிகளையும் கெடுதல்களையும் செய்துவிட, மீண்டும் மனிதர்களிடம் வந்து உயர்ப்பலி எடுக்கும் நிகழ்வானது வேதனைதரும் விடையமாகும். கடந்த டிசம்பர் 2019ம் ஆண்டு சீனா-வுஹான் மாகாணத்தில் பரவத்தொடங்கிய இந்தத் தொற்று நோயால் இன்று உலகமே கண்ணீர் வடிக்கும் நிலை தோன்றியிருக்கின்றது. இனி இந்தத் கிருமித்தொற்று நோயால் உலகில் ஏற்பட்ட சாதக, பாதக நிகழ்வுகளை சிறிது பார்ப்போம்...

சாதக நிகழ்வுகள்...

-இன,மத,நிறம்,சாதி, அரசியல் போன்ற வேறுபாடுகளை மறந்து மக்கள் ஒன்றுபடுவதற்கான வாய்ப்பை அளித்தது.

-கட்டுப்பாடான வாழ்க்கை முறையை ஆணித்தரமான மனித மனங்களில் நிலைநாட்டியது.

-1ம், 2ம் உலக யுத்தத்தையும் மற்றும் இயற்கைப் பேரழிவுகளையும் உயிரழிவுகளையும் நினைவுபடுத்தியதால் மக்கள் மனங்களில் மனமாற்றத்தை ஏற்படுத்தியது.

-மனிதகுல வாழ்வியல் சிந்தனைகளில் பல திடீர் மனமாற்றங்களை ஏற்படுத்தியது.

-சுத்தம் சுக வாழ்வை உறுதிப்படுத்தியதுடன் ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழ அறிவைப்புகட்டி உறுதிப்படுத்தியது.

-ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள் மூடப்பட்டதால் கோடான கோடி பணம், பவுண், பொருள் வேறு நல்ல தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது.

-மதமும், அரசியலும் ஏனைய முரண்பாடுகளும் இல்லாமல் எல்லோரும் மனிதர்கள் என்ற பாடத்தைக் கற்பித்தது.

-மது பாவனை, மற்றும் போதைகளைப் பலர் கைவிட்டபடியால் பலரை திருந்தி வாழக்கற்றுக் கொடுத்ததுடன் அவர்களின் நீண்ட ஆயுளுக்கும் வழிகோலியது.

-பாலியல் வன்முறைகள், படுகொலைகள், கொள்ளை போன்ற சமூகக் கொடுமைகள் குறைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-உலகமெல்லாம் அதிகளவு சுத்தம் பேணப்பட்டது. பூமி மாதாவுக்கு நல்ல எதிர்காலம் என நோக்கப்பட்டது.

-ஆண்டுக்கு 30 லட்சம் பாம்புகளையும் மற்றும் பல உயிரினங்களையும் உணவுக்காக சீனா உற்பத்தி செய்வது வழக்கம். ஆனால் இதன் தாக்கத்தால் உற்பத்தி பெருமளவு தடைப்பட்டது.

-உணவுப் பழக்கத்தில் மாற்றம் அதிகமானோர் மாமிச உணவுகளைத் தவிர்த்து மரக்கறி பழவகைகளை உண்ணும் பழக்கம் அதிகரித்தது.

-முன் எப்பொழுதும் இல்லாத அளவில் மனிதர்கள் தமது கைகளைக் கழுவும் பழக்கத்தை மேற்கொண்டபடியால் அதிகளவு சுத்தம் பேணப்பட்டது. இதனால் இறப்புக்கள் சிறிது குறைவடைந்தன.

-உலக அரசியலில் ஒரு சமநிலை ஏற்பட்டது. நான் பெரிது நீ பெரிது என்ற அரசியல் தலைவர்களின் ஆதிக்கத்துக்கு முற்றிப்புள்ளி வைக்கப்பட்டது.

-உலக சுற்றுச் சூழல் என்றுமில்லாவாறு கடைப்பிடிக்கப்பட்டதால் நாம் வாழும் பூமி மாசுபடுதலில் இருந்து காப்பாற்றப்பட்டது.

-கடந்த பல நூற்றாண்டுகளாக இயற்கையை மாசுபடுத்திவந்த மனிதனுக்கு இந்த இயற்கை எச்சரிக்கைவிடுத்து அறிவுறுத்தியுள்ளது.

-போர், மற்றும் ஆதிக்க வெறியை முன்னின்று நடாத்திவந்த பல நாடுகளின் கோடானகோடி ஆயுத உற்பத்தி விற்பனைச் செலவுகள் மீதப்படுத்தப்பட்டன.

-வேட்டையாடுதல் உயிரினங்களை கண்டபடி அழித்துவந்த மனிதனின் செயற்பாடுகள் குறைந்தபடியால் காடுகள் மலைகள் வாழும் உயிரினங்கள் அழிவது குறைந்ததுடன் அவற்றின் பெருக்கம் கூடியது.விலங்கினங்கள் பறவைகள் காடுகளைவிட்டு வெளியேறி ஊர்மனைகளுக்குள் வந்து சுதந்திரமாக நடமாடியிருக்கின்றன.

-முதலாளித்துவத்துக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது. சோஷலிச வாழ்வு எழுச்சிக்கு வழிகோலியது.

-சின்னத்திரை, சினிமாக்களில் மூழ்கியோரை அதன் தாக்கத்திலிருந்து விடுபட வைத்தது. புத்தகம் வாசிக்கும் பழக்கம். கணனிகளில் தேடிப் படிக்கும் தொகையினரைக் கூட்டியது.

-பெண்கள்தான் சமைக்க வேண்டும் என்ற குடும்பப் பொறுப்பை மாற்றியிருக்கிறது. கணவன்மாரும் பிள்ளைகளும் ருசியாகச் சமையல் வேலை செய்யக் கற்றுக் கொடுத்ததுடன் குடும்பச் சுமைகளைக் கற்றுக் கொடுத்து, பெண்களின் கஸ்டங்களை உணர்த்தியுள்ளது.

-முடக்க நிலை நீடித்தபடியால் எதிர்பாராத கருத்தரிப்புகள் இடம் பெற்றிருந்தமையால் உலகில் சுமார் 70 லட்சம் பெண்கள் கர்ப்பவதியாகியிருப்பதாக ஐக்கிநாடுகள் சபை அறிவித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமான நிகழ்வுகள்...

-ஒரேநாளில் (16.4.2020) உலகில் 5.230 பேர் பலியாகினர். அமெரிக்காவில் மட்டும் 2.500 பேர் மரணமடைந்தனர்.
-வீட்டில் அனைவரும் இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபடியால் குடும்ப வன்முறைகள் அதிகரித்தன.
-ஆலயம், கோவில், மசூதி போன்ற வழிபாட்டுத் தலங்கள் மூடப்பட்டதால் மத நம்பிக்கை கொண்டோரின் மனநிலை பாதிக்கப்பட்டதுடன் மத நம்பிக்கைகளும் குறைவடைந்தன.
-மதுபானம், போதைவஸ்த்துக்களுக்கு அடிமையாக வாழ்ந்த பலர் தற்கொலைக்குத் தள்ளப்பட்டனர்.
-மது பானங்களால் கோடி..கோடியாகச் சம்பாதித்த அரசுகளும் தனியாரும் வர்த்தகர்களும் நட்டத்தைத் தழுவினார்கள்.
-வர்த்தகர்கள் பொருட்களை விலைகூட்டி விற்பனை செய்ததால் சாதாரண கூலிமக்கள் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழும் மக்களுக்கு அன்றாட வாழ்வியலில் பெரும் சுமை ஏற்பட்டது.
-மனிதரை அழகுபடுத்தி, வாசனையூட்டி சுகாதாரத்தைப் பேணிய பூக்கள் மற்றும் விற்பனை செய்யமுடியாமல் இருந்த காய்கறிகள், பழங்கள் விற்பனையில்லாதகாரணத்தால் அனைத்தும் மண்ணில் புதையுண்டன.
-உலக மக்களால் வருடாவருடம் கொண்டாடப்படும் பெரிய வெள்ளிநாள் (10-04-2011) மிக நீண்ட காலத்துக்குப்பின் இவ்வருடம் உலகெங்கும் கொண்டாடப்படவில்லை. பாப்பரசரின் புனித வழிபாடுகூட இந்தவருடம் இத்தாலியில் நடைபெறவிலலை.
-கோடான கோடி கழதங்கள், பொதிகள், உலகெங்கும் தேங்கிக் கிடந்தன. போக்குவரத்துகள் அனைத்துக்குமே பாதிப்பு ஏற்பட்டன.
-உலகில் நடைபெறவேண்டிய அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் தடைப்பட்டன. நிறுத்தப்பட்டன பின்போடப்பட்டன.
-அனைத்துத் தரப்பினரின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. இதனால் கோடான கோடி மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது
-பல்லாயிரம் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், உற்பத்தி நியைலங்கள், சிறுகடைகள் மூடப்பட்டதால் கோடானகோடி தொழிலாளர்கள் வேலை இழந்ததுடன் பாரிய அளவில் உற்பத்தி-விற்பனையில் நட்டம் ஏற்பட்டது
-உணவகங்கள், ஹொட்டல்கள், விடுதிகள் மூடப்பட்டதால் தொழிலிழப்பு, வருமானம் இழப்பு, பெரும் நட்டம் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்போக்குவரத்து உட்பட அனைத்துப் போக்குவரத்துத் துறைகளும் நிறுத்தப்பட்டு அல்லது குறைக்கப்பட்டதால் இத்துறைகளுக்கு நட்டம் ஏற்பட்டது. கோடிக்கணக்கானோர் வேலை இழந்தனர்.

-அனைத்து வைத்தியசாலைகள் சுகாதர நிலையங்கள் கூடுதலான நேரம் இயங்கியமை, மேலதிகப் பணியாளர்கள், இளைப்பாறிய பணியாளர்களை வேலைக்கு அழைத்ததால் பெரும் பணச்செலவு ஏற்பட்டது.

-இந்த நோயினால் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு இடமில்லாமல், ஆள் பற்றாக்குறை நிலவியதால் பெரும் சிரமங்கள் ஏற்பட்டன. இறந்த உறவுகளை இறுதிநேரத்தில்கூட பார்க்கமுடியாத பெரும் சோக நிகழ்வுகள் உலகமெல்லாம் நிலவியது.

-உலகில் இந்த ஆண்டில்தான் மிக அதிகமான முதியவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். இங்கிலாந்தில் ஒரே நாளில் 1400 முதியவர்கள் இறந்தனர்.

-காடுகளில் வாழ்ந்த மிருகங்களும் பறவைகளும் மிருகக் காட்சி சாலைகளில் வாழ்ந்தவைகளும் என்றுமில்லாதவாறு உணவின்றித் தவித்துள்ளன.

-சில நாடுகள் கடலால் முழ்கும் அபாயம் தோன்றியுள்ளன.

-உலகில் வரலாறு காணாத அளவில் சுமார் 50 கோடி மக்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் மட்டும் 6 கோடிபேர் வேலை இழப்பு.

-வீடுகளில் முடக்கத்தில் வாழ்ந்ததால் சிறுவர்கள் பெண்கள் மீதான தாக்குதல்கள் வன்முறைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்தன.

-உலகம் முழுவதும் சுமார் 25.000 மருத்துவர்கள், பணியாளர்கள் இறந்திருக்கிறார்கள்.

-உலகில் சுமார் 50 மில்லியன் சிறுவர்கள் வறுமைக்கோட்டுக்குள் வாழவேண்டிய நிலைக்கு ஆளாகினர்.

-கடந்த 100 ஆண்டுகளின் பின் உலகப்பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டது. எண்ணெய் விலை பெரும் சரிவைச் சந்தித்தது.

-சிறுவர் பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள் அதிகரிப்பு

-ஏப்ரல் மாதம் மிக அதிகமான பிரேதப் பெட்டிகள் விற்பனை.

-முடக்கத்தில் இருந்தபடியால் அதிகம் உண்டு நிறை கூடியோரின் எண்ணிக்கை அதிகரிப்பு. வைத்தியச் செலவும் கூடியது.

-30-04-2020 வரை இந்நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியதுடன் தொற்றாளர் எண்ணிக்கை 3.5 லட்சத்தை எட்டிச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Coronavirus-Fälle weltweit

STAND: 10.05.2020, 18 Uhr

4.031.246	1.393.514*	280.546
bestätigt	wieder gesund	Todesfälle

Region			
USA	1.312.213	212.534	78.807
Spanien	223.578	133.952	26.478
Großbritannien	219.183	-	31.855
Italien	219.070	105.186	30.560
Russland	209.688	34.306	1.915
Deutschland	171.639	144.400	7.549
Brasilien	156.604	61.685	10.697
Frankreich	138.854	56.038	26.310
Türkei	138.657	92.691	3.786
Iran	107.603	86.143	6.640
China	82.902	78.121	4.633
Kanada	68.938	31.657	4.823
Indien	65.021	19.665	2.153
Peru	65.015	20.246	1.814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரோனா அவசரகால நிதி உதவி...

2019-2020 கொரோனா தொற்றால் பல லட்சம் மக்கள் மடிந்தனர். நம் தாயக தேசத்திலும் ஊரடங்கு கட்டுப்பாடுகளால் நாளாந்த உணவுக்கே மிகவும் இன்னலுற்றுவருகிறார்கள். இவர்களுக்கு உதவும்பொருட்டு எமது சஞ்சிகையின் வாசகர்கள் அளித்த பேருதவியால் தாயகத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எமது பிரதிநிதிகள்மூலம் நிவாரண உணவுப்பொதிகள் ஏப்ரல்-மே மாதங்களில் வழங்கப்பட்டன. இந்த உணவு விநியோகத்திற்கு அவசரகால நிதியுதவிபுரிந்த அன்பு உள்ளங்களுக்கு நன்றிகள்..நிதி வழங்கியவர்கள் விபரம்..

திரு ஜெயம் தங்கராசா	Holland	- 500-00 யூரோ
திரு ஐ.இரகுநாதன்	Mülheim	- 200-00
திரு ப.பசுபதிராசா	Wuppetral	- 100--00
திரு சி.வேலும்மயிலும்	München	- 90-00
திருமதி எ.கலைவாணி	Weeze	- 60-00
திரு ச.சத்தியகுமார்	Krefeld	- 50-00
திரு சி.மகாலிங்கம்	Oberhausen	- 50-00
திரு ச.சுதர்சன்	London	- 50-00
திரு ப.பாஸ்கரன்	London	- 50-00
திரு அ.வரதராசன்	Duddeldorf	- 50-00
செல்வன் சி.பிரதீஸ்	Dusseldorf	- 50-00
திரு சு.விக்னேஸ்வரன்	Essen	- 50-00
திரு அ.புவனேந்திரன்	Oberhausen	- 20-00
திருமதி சி.நகுலா	Selm	- 20-00
திருமதி து.சாந்தினி	Essen	- 20-00
திருமதி சி.இராஜேஸ்வரி	Duisburg	- 100-00

மொத்த வரவு		1460-00 யூரோ

அனுப்பியது:-

(1) "ஒளிரும் இல்லம்" முல்லை மாவட்டம்-துணுக்காய்	-300-00
(2) "வாசம்" உதவும் கரங்கள் அமைப்பு-மட்டக்களப்பு	-300-00
(3) "வன்னி மண்" அபிவிருத்தி மன்றம் -வவுனியா	-400-00
(4) "தமிழ்பண்பாட்டுஆய்வுமன்றம்(மலையகம்)இரத்தினபுரி	-450-00
வங்கிக்கட்டணம் 4X7.00	28-00

	-1478-00

(72ம் பக்கம் பார்க்கலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுக ளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு- மன்னார் -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா -480-00

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா -480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு -480-00

07. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா

08. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00

09. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

10. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 1-03-2020 (மேலதிகச் செலவு) - 50-94

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

\+ 429-06

Corona அவசரகால நிதி சேகரிப்பால் கிடைத்தபணம்

(விபரம் 70ம் பக்கம்) + 1460-00

\+ 1889-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 1889-06

அனுப்பியது...

கொரோனா நிதி உதவிக்கணக்கால்....

(1) மல்லாவி - துணுக்காய் "ஒளிரும் இல்லம்"
ஊடாக முல்லைத்தீவு மாவட்டம் -300-00

(2) "வாசம்" உதவும் கரங்கள் ஊடாக
மட்டக்களப்பு மாவட்டம் -300-00

(3) வவுனியா "வன்னிமண் நற்பணி மன்றம்"
ஊடாக வவுனியா மாவட்டம் -400-00

(4) "தமிழர்பண்பாட்டு ஆய்வு மன்றம்"
ஊடாக மலையகம் - நுவரெலியா மாவட்டம் -450-00

வங்கிக்கூலி 4X7.00 - 28-00

-1478-00

"மண்"சஞ்சிகை ஆதரவற்றோர் நிதிக்கணக்கால்...

(5) "அன்பகம்" வவுனியா
சிறுவர் காப்பகம் -500-00
வங்கிக்கட்டணம் 1X15.00 15-00

- 1993-33

Mann A/C
வங்கி வரி:-01.03.2020 - 31.03.2020 - 10-53
01.04.2020 - 30.04.2020- 20-56 - 31-09

- 2024-09 - 2024-09

30-04-2020 கையிருப்பு (மேலதிகச் செலவு) - 135-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு வ சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக
சஞ்சிகைக்கும்
இதழின் வாசகர் பெருமக்களுக்கும் ,

நன்றிநவிழ்தல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகட்கு"

எனும் வள்ளுவர் வாக்குக்கு அமைய பைந்தமிழர் சீர் மிக்கச் செயலாம் நன்றி நவிழ்தலை எமது யேர்மனி "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கு நயமுடனே செப்ப வாய்ப்பு கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சிக் கொள்கின்றேன்.

எமது இரத்தினபுரி மாவட்டத்தில் மலையக தமிழ் மக்கள் 58 தோட்டங்களில் 232 பிரிவுகளில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இம்மக்களுக்கு, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் உதவிக்கரம் நீட்டிய எமது ஐரோப்பா வாழ் எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். யேர்மனி ""மண்"" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை வழங்கிய கொடையளிப்பானது ஏறத்தாள 90 ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பசியாற்றி இருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம்.

ஐரோப்பா தாண்டி மலையகம் நோக்கிய உங்கள் நிவாரணப்பணியானது உண்மையில் பசியோடு வழிப்பார்த்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் பசியாற்றிருக்கின்றது என்பதில் எச்சந்தேகமுமில்லை. ஏனெனின் குறைந்தது 1500.00 ரூபாய்க்கு பெறுமதியான பொதியேனும் ஒரு குடும்பத்திற்கு வழங்க வேண்டும் இருப்பினும் 510.00 ரூபாய் மட்டுமே பெறுமதியான பொதியையே நாம் வழங்கினோம்.

அதையெனும் கிடைத்தால் போதுமென பாடுபட்டு நின்ற சனங்களை நீங்கள் புகைப்படங்களில் கண்டிருப்பீர்கள். நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும். பெரும் ஆலயங்கள் எழுப்பிய கோடிப்பலன்கள் உங்களை வந்தடைய வாழ்த்துவதோடு எம்மக்கள் சார்பாக ""மண்"" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும் இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இன்னும் பலக்குடும்பங்கள் வறுமையில் வாடி வழிப்பார்த்திருக்கின்றது என்பதினை அடிக்கோடிட்டு இன் நன்றிநவிழ்தல் மடலை நிறைவு செய்யும்

இவண்

நன்றிகள்

Best Regards

Ganeshan Sivaraj B.A(publi.Admi) President

Tamil Cultural Research Forum 10,Pattiyovita road, Ratnapura,

tamilcultural.lk@gmail.com ganeshansivaraj@gmail.com

+94 77 398 43 43 +94 76 61 61 522 (WhatsApp)

பின்னிணைப்பு :-

தோட்டப் பிரிவு -

கோணக்குப்புற தோட்டம், மாசல்வெளி பிரிவு	27	குடும்பங்கள்
நிலகாமம் தோட்டம், இலக்கம் 3 பிரிவு	68	குடும்பங்கள்

மொத்தம் 95 குடும்பங்கள் பயன் பெற்றன.

""மண்""சஞ்சிகை கொடையளிப்புத் தொகை		41,931.00 ரூபா
பொருட்செலவு	(510 X 95)	48,450.00 ரூபா
போக்குவரத்து		2,300.00 ரூபா
பொதி செய்தல் செலவு		1,425.00 ரூபா
மொத்தம்		52,175.00.ரூபா

(மிகுதி தொகை ஆசிரிய நண்பர்களின் பங்களிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ஒළිරුම්වාළ්වු සංවිධානය - තුනුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி 25/09/2020

திரு.வசிவராசா,
பிரதம ஆசிரியர்,
மண் சஞ்சிகை,
ஜேர்மனி.

நன்றி தெரிவித்தல்

மேற்படி நற்போது நாட்டில் ஏற்பட்ட சுகாதார சூழ் நிலையின் காரணமாக எமது துணுக்காய் பிரதேச செயலக பிரிவு மற்றும் அயல் பிரதேச செயலக பிரிவுகளான மாந்தை கீழக்கு, ஒட்டிசுட்டான், மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுகளில் வாழ்கின்ற மிகவும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 62,000.00 கிடைக்கப்பெற்றோம்.

இந் நிதியை அன்றாடம் தொழிலுக்குச் செல்லோர், வீடுகளில் இருக்க வேண்டிய சூழலால் உணவுக்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். இந் நிலையில் எமது பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களின் நிலையறிந்து 42 குடும்பங்களுக்கு ரூபா 1463.00 பெறுமதியில் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்து அவர்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று வழங்கினோம்.

இந் நிதியை வழங்கிய ஜேர்மன் வாழ் எங்கள் உறவுகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன் இதனை ஏற்பாடு செய்து தந்த திரு.வசிவராசா(மண் சஞ்சிகை) அவர்களுக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் என்றும் நன்றி உடையவர்களாக இருப்போம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

ஜெகதாதன்
தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

சி.சிவதவன்
செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

வழங்கப்பட்ட பொருள் விபரங்கள்

7 கிலோ அரிசி(100 ரூபா) 700 ரூபா
4 கிலோ மா (90 ரூபா) 360 ரூபா
1 கிலோ சீனி (120 ரூபா) 120ரூபா
250 கிறாம் தேத்தலி (175 ரூபா) 175 ரூபா
1 கிலோ உப்பு (50 ரூபா) 50 ரூபா
1 சோப் (58 ரூபா) 58 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிச்செயலாளர் உதவிக்கோட்டம்,
பிரதேச செயலகம்,
வவுனியா.
13.04.2020

வவுனியா நீதவான்,
பிரதம நீதிமன்றம்,
மண் கனிய இலகுபடுத்தும் சஞ்சிகை.
பொருள்:

வணக்கம்

வவுனியா மாவட்ட நிருவாக மாவட்டம்,
வவுனியா.

அதிகாரவலயப் பொருட்கள் பெறுதல் கொண்டமை தொடர்பாக

மேற்படி விடயம் தொடர்பாக, வவுனியாவிலுள்ள சேமக்கிடங்கில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களை நீதி 15 குற்றவாளிகளுக்குமட்டும் தேவைக்கமைய கிராம அலுவலகர் பிரிவிலுள்ள நபர்களை நீதி 15 குற்றவாளிகளுக்குமட்டும் தங்களது அலைபேசியூடாக உரிய உத்தரவு பெற்றுக்கொண்டதன் பின்னரான விபரங்களையும் மற்றும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், தொடர்ந்தும் உங்கள் ஒத்துழைப்பினை எதிர்பார்த்து நன்றிகளுடன்.

உதவிச்செயலாளர் உதவிக்கோட்டம்,
பிரதேச செயலகம்,
வவுனியா.

K.VASANTHARUBAN
(Development Officer)
(Assistant Secretary)
(Divisional Secretariat)
Vavuniya

ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்
Olirumvaalvu Organizaions – Thunukkai
Email:-olirumvaalvu.Thunukkai@gmail.com
T.P:021 206 0620
Reg No: MU/DS/TNK/RVSS/22/2015

1075

பற்றுச் சீட்டு

திகதி 15/04/2020

பெறுபவர் திருமதி சிவராசா (பிரதேசசபை)

முகவரி மண்ணெண்ணை கொள்வனவு

விபரம் தினப்பாவிப்பு

தொகை எழுத்தில் இருபத்தாயிரத்து பிறைஞ்சாறு ரூபாவை

ரூபாய் 61994/=

பொருளாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமண் நற்பணி மன்றம்
VANNIMAN NATPANI MANTRAM

மரக்கறித்தோட்ட வீதி
நெடுங்கேணி,
வவுனியா.

E-mail : vanniman.mantram077@gmail.com

Marrakkarampalai Road,
Nedukkulam,
Vavuniya.

Date 11.04.2020

வைரமுத்து சிவராசா,
பிரதம ஆசிரியர்,
மணகலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

Covid 19 நிவாரணம் பெற்றமைக்கு நன்றி கூறல்

கோவிட் 19 நிவாரண உதவிகளுக்காக தங்களால் எமக்கு வழங்கப்பட்ட ரூபா நாற்பத்திரெண்டாயிரம் (42000.00) பெறுமதியான பணத்திற்கு மிகத்தேவையுடைய 30 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன இதில் குறிப்பாக சேமமடு கிராமசேவகர் பிரிவில் 15 குடும்பங்களுக்கும் மற்றும் கோவில்குளம், [illegible] ஆகிய கிராமங்களில் 15 குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது. எனவே இவ்வாறான சூழ்நிலையிலும் சிரமத்தை பாராது இவ்உதவியினை செய்தமைக்கு நன்றியையும் பாராட்டுகளையும் வன்னிமண் நற்பணி மன்றம் சார்பாகவும் தெரிவித்து கொள்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்ட கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக ஊரடங்கு நீடிக்கப்படுவதால் அன்றாட கூலிவேலை செய்யும் ஏழ்மை நிலையிலும் சமைத்து சாப்பிட கையேந்தும் 1765 ஏழை குடும்பங்களான உலர்உணவு பொதிகள் வழங்குவதற்கான விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது அதனை வழங்குவதற்கு தங்களால் இயன்ற உதவிகளை செய்துதருமாறு பிரதம நாழ்வரோட்டி கேட்டு நிற்கின்றோம்.

நன்றி

வன்னிமண் நற்பணி மன்றம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசம் உதவும் கரங்கள்

VAASAM HELPING HANDS

வாசம்

Vinayaha Puram, Mylampavely,
Batticaloa.

விநாயகபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு

+94 77 484614:

மண் சஞ்சிகை நிர்வாகம்
ஜேர்மனி
08.05.2020

நன்றி தெரிவிக்கிறோம்

தற்போது எமது தாயகத்திலும் தற்பொழுள்ள அனைத்துலக
தொற்றுநோயை (covid-19) காரணமாக இயல்பாயிருந்த
கிழந்து நிற்கும் எமது மக்களுக்காக நீங்களனுப்பி
வைத்தப்பட்ட 555945.25 இந்திய ரூபாவைப்பெற்றது எமது
கரங்களை மேலும் பலப்படுத்தியுள்ளது. இவ்வுதவியின் மூலம்
யுத்தத்தினாலும் சுனாமியினால் தற்போதைய கொரோனா
வைரஸ் நோயினாலும் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட
மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட
இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ்வுதவியினை வழங்கியதற்கு எமது தாயக மக்கள் சார்பாக
நன்றியினை தெரிவிப்பதோடு அதாவர்த்தியான
போது அணைந்து எமது மக்களுக்கு உற்றதருணமான வழங்கலை
மிகுந்த நம்பிக்கையுடன் மேலும் தொடரவேண்டுகிறோம்.

Web. WWW.Vaasam.org info@vaasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடை வள்ளல்கள்...



500-00 யூரோ

திரு ஜெயம் தங்கராசா
எழுத்தாளர் - Holland

200-00 யூரோ

திரு ஐ இரகுநாதன்
மொழிபெயர்ப்பாளர் - Germany

உலகெல்லாம் அச்சுறுத்தி பல்லாயிரம் மக்களைப் பலி எடுத்து மக்களைப் பசி பட்டினிக்கு உள்ளாக்கிய கொரோனா கொடிய நுண்கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்டனர். தாயக மக்களுக்கு உதவும் பணிக்காக மண் சஞ்சிகை எடுத்துவரும் மனிதநேயப் பணிக்காக பலர் கரம்கொடுத்தமைக்காக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் கேட்காமலே தாமாக முன்வந்து பெரும் நிதிப்பங்களித்த 500-00யூரோ, 200-00 யூரோக்களை அள்ளி வழங்கிய இந்த இரு நட்புக்களுக்கும் மண் சஞ்சிகையினரின் நன்றி கலந்த வாழ்த்துக்கள். இந்த இரு அன்பு உள்ளங்களும் மண் சஞ்சிகையின் நீண்டகால மனிதநேயப் பணிக்காகக் பலதடவைகள் இப்படியான பேருதவிகளைச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடையமாகும்.

இன்றைய மனிதர்களில் பலர் பொதுப்பணிக்காக பத்துயூரோ தரும்படி கேட்டால் பதினைந்து கேள்விகள் கேட்டுத் தட்டிக்களித்துவிடுவார்கள். ஆனால் இவர்களைப் போன்ற சில நல்லுள்ளங்கள் நம்மிடையே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்பது மனதை மகிழ வைக்கின்றது. வாழ்க கொடையாளிகள்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சஞ்சிகை வாசகர்களின் நிதி உதவியினால் கொரோனா வைரஸ் உதவுப்பணிகளுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 2020 ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்ட மனிதநேய உதவிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

ERDE

MANN
Germany / Ausgabe 201



மூத்த எழுத்தாளர்
நீர்வையூர் பொன்னையன்
தோற்றம் 24.03.1930
மறைவு 27.03.2020

மூத்த பன்முகக்கலைஞர்
A - இரகுநாதன்
தோற்றம் 05.05.1930
மறைவு 22.04.2020

(விபரம் உள்ளே)

வருட சந்தா ஜேர்மனி 20€
ஏனைய நாடுகள் 25€

Published by Mann Media Foundation
Postfach 101 | 73428 Aalen